தமிழீழ தேசிய
விடுதலை
முன்னணியின்
அரசியல்
தத்துவார்த்த
விமர்சன ஏடு

# இலக்கு

# ஐக்கியத்திற்காகப் போராடுவோம்!

# போராட்டத்திற்காக ஐக்கியப்படுவோம்!

NLFT
BM BOX 7204
LONDON
WC1N 3XX

சுவடு — 5
தை, மாசி, பங்குனி
1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வெகுஜனத் தொடர்பு என்பது
- வெடிகுண்டுகளைக் காட்டிலும்
- வலிமையானது

## அன்பார்ந்த வாசகர்களே!

இலக்கு தனது ஓராண்டைப் பூர்த்தி செய்து இரண்டாவது ஆண்டில் காலடி வைத்துள்ளது. இரண்டாவது ஆண்டிலிருந்து மாதமொருமுறை 'இலக்கு' உங்கள் கைகளை வந்தடையுமென அறிவித்திருந்தோம். எமது ஆசைகள் பல சமயங்களில் நிறை வேறுவதில்லையே, எமது விருப்பங்கள் யதார்த்தத்துக்கு இசைவாக இல்லாவிடின் அவை வெறும் விருப்பங்களாக இருக்குமேயன்றி செயலாகாது. எமக்கிருக்கும் தடைகள நீங்கள் உணரக் கூடியவைதான். எமது கஷ்டங்கள் பற்றி பலமுறை உங்களிடம் மனந்திறந்து தெரியப்படுத்தியுள்ளோம். உங்கள் ஆதரவும் உதவியும் ஓரளவு கிடைத்தாலும போது மானதாகவில்லை. 'இலக்கு'விற்கு தாராளமாக உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள், நிதியுதவி வழங்குங்கள். 'இலக்கு' தன்னை 'செழுமைப்படுத்த' ஒழுங்காக விமர்சியுங்கள்.

'இலக்கு' இரண்டு மாதத்துக்கொருமுறைதான் சில காலங்களுக்கு வெளிவரும். வாய்ப்புக்கிட்டும்போது மாதமொரு முறையாக உங்கள் கைகளை வந்தடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கு

## மக்கள் பலம் இன்றேல்

## மக்கள் போராட்டம் இல்லை!

எமது தமிழீழ விடுதலைக்கான போராட்டம் முன் எப்போதைய நிலையையும் விட இன்று மிகவும் நெருக்கடிக்கு உள்ளாகி விட்டது. அரச இராணுவம் கட்டவிழ்த்து விட்டுள்ள பயங்கரவாத நடவடிக்கைகள் உச்சநிலையை அடைந்துள்ளன. கைது செய்யப்பட்டவர்கள்பற்றிஎந்தவிததகவலும் கிடைப்பதில்லை. ஒவ்வொரு நாளும் வீதி ஓரங்களில் சடலங்கள் குவிகின்றன. கரையோரப்புற மக்கள் குடியெழும்பி வருகிறார்கள். தமது தொழில் வாய்ப்புகள் பறிக்கப்பட்ட நிலையில் சீவிக்கமுடியாது உணவுப் பஞ்சத்தால் தவிக்கிறார்கள். சிலர் இந்தியாவுக்கு அகதியாக ஓடினாலும் இங்குள்ள பெரும்பாலானோர் திக்கற்று நிற்கிறார்கள்.

எமது விடுதலை இயக்கங்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. பஞ்சத்தாலும் பட்டினியாலும் வாடும் இம் மக்களுக்கு உதவியளிப்பது என்பது இயக்கங்களுக்கு சாத்தியமான ஒன்றாக இல்லை. பொது ஸ்தாபனங்களும் எவ்வளவு காலத்திற்குத்தான் கொடுக்க முடியும். விரக்தியுற்ற மக்கள் மத்தியில் விடுதலைக்கு எதிரான — இயக்கங்களுக்கு — எதிரான கருத்துகளும் தோன்றி வருகின்றன.

இவை ஒரு புறமிருக்க, இயக்கங்களின் நாளாந்த நடவடிக்கைகள் பற்றிய அதிருப்தியும் வளர்ந்து வருகின்றது. கொள்ளை, களவு, கொலை என்பன மலிந்து விட்டன. ஆட்கடத்தலும், பணயம் வைப்பும் கூட தற்போது அதிகரித்து வருகிறது. இயக்கத் தோழர்களிடையே கட்டுப்பாடின்மை, அராஜகப் போக்கு என்பன தெளிவாகத் தெரிய ஆரம்பித்துள்ளன.

இந்த நிலைமைகளுக்கு காரணம் என்ன?

தவறுகளை இனம் கண்டு கொள்வதும் அதிலிருந்து திருந்திக் கொள்வதும் இல்லாமல் எந்த விடுதலை இயக்கமும் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளுதலில் முன்னேற முடியாது.

ஆனால், துரதிர்ஷ்ட வசமாக எமது விடுதலை இயக்கங்களிடையே இத்தகைய தன்மை காணப்படுகிறது.

'கெரில்லாத் தாக்குதல் முலம் புரட்சிக்காக மக்களை தயார்ப்படுத்த முடியும்' என்ற கருத்துப்பட அண்மையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இருந்தன.

நாம் ஆரம்பத்திலிருந்தே கூறி வருகின்றோம், புரட்சிக்கான சூழ்நிலைகளையோ, அதற்கு மக்களை தயார் செய்தலையோ இத்தகைய தாக்குதல்களால் ஒரு பொழுதும் உருவாக்கிவிட முடியாது. ஆளும் வர்க்கத்தின் கருத்துகளால் பாதிப் புற்றிருக்கும் மக்கள் மத்தியில் தாக்குதல்கள் புரட்சிக்கான

---

மக்களே, மக்கள் மட்டுமே
வரலாற்றை உருவாக்கும் உந்து சக்திகளாவர்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்புகளுக்குப் பதில், முதலில் 'தாக்குதல் நடவடிக்கைகளில்' நம்பிக்கையையும், அதன் விளைவுகளை ஒட்டி அதிருப்தியையுமே விளைவிக்கும். அதனால் தான் ஒரு புரட்சிகர கட்சி அவசியமாகிறது. மக்களை புரட்சி ரப் போராட்டத்திற்கு தயார் செய்யும் பணியில் ஈடுபடாமல், அவர்களை அணி திரட்டாமல் நடவடிக்கைகளில் குதிப்பது, புரட்சிக்கு மக்களை தயார்படுத்துவதற்கு பதில் அவர்களை பின் தள்ளவே செய்யும். புரட்சிக்கான நோக்கத்தில் ஸ்தாபன ரீதியாக அணிக் திரட்டப்பட்ட மக்களின் கெரில்லா நடவடிக்கைகள் மட்டுமே விரிவுபடுத்தப்பட்ட போராட்டமாக பரிணமிக்க முடியும். அது தவிர்ந்த கெரில்லா நடவடிக்கைகள் கட்டுப்பாடற்ற 'குட்டி முதலாளிய அராஜகப் போக்கை' யே விளைவிக்கும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. தற்போது நடந்து கொண்டிருக்கும் பல்வேறு சம்பவங்கள் இதற்கு நல்ல உதாரணங்களாக உள்ளன.

நாம் மீண்டும் மொருமுறை எமது போராளிகளுக்கு வலியுறுத்திக்கூற விரும்புகின்றோம்; 'மக்கள் மத்தியில் ஆயுதங்களை கொண்டு செல்வதற்குப் பதில் புரட்சிகரக் கருத்துக்களுடன் செல்லுவோம்; ஆயுதங்களைக் காட்டி அணித்திரட்டுவதற்குப் பதில் அவர்களும் வர்க்கத்தையும், சுரண்டலையும் அம்பலப்படுத்தி அரசியலதிகாரத்தை வென்றெடுப்பதற்கு அவர்களை அணிதிரட்டுவோம். அரசு அதிகாரமின்றி அனைத்தும் மாயையே என்பதை அவர்களுக்கு தெளிவு படுத்துவோம்; துப்பாக்கி குழலில் இருந்து பிறக்கும் அரசியலதிகாரத்தைப் பெற, முதலில் அவர்களைத் தயார் செய்வோம். ஏகாதிபத்தியங்களையும், உள் நாட்டுக் கூட்டுச்சதியாளர்களையும் எதிர்த்து புரட்சிகர மக்கள் யுத்தப் பாதையில் முன்னேறுவோம்; தேசிய விடுதலைப் போராட்டத்தை புதிய ஜன நாயகப் புரட்சியாக முன்னெடுக்க மக்களை அணி திரட்டுவோம்.

மக்கள் பலம் இன்றேல், மக்கள் போராட்டம் இல்லை. எனவே அவர்களில் தங்கி இருந்து அவர்களைப் புரட்சிக்குத் தயார் செய்வோம்...

மறந்து விட வேண்டாம்...
எஞ்சி இருக்கும் நேரம்
அச்சந்தரும் வண்ணம்
மிகச் சிறிதே - ஆனாலும்
இருக்கிறது. !

---

## தோழர் பகத் சிங்கின் நீதிமன்ற உரையில் இருந்து...

"புரட்சி என்பது உலகின் நியதி; மனித சமுதாய முன்னேற்றத்தின் இரகசியம்.

மக்களுக்காக மக்களால்புரட்சி என்பதை, தொழிலாளர்கள் விவசாயிகள் ஒரே அணியில் திரட்டப்பட்ட ஒரு ஸ்தாபனத்தின் மூலம் மட்டுமே பெறமுடியும்.

புரட்சிவாதி என்று நான்சொல்வதுகையில் வெடிகுண்டுகளுடனும் துப்பாக்கிகளுடனும் அலையும் மனிதன் எனறு அர்த்தமாகாது.

பயங்கர நடவடிக்கைகள் என்பது புரட்சியின் போக்கில் தவிர்க்க முடியாத அவசியமான ஒரு கட்டம்.

பயங்கர நடவடிக்கைகள் என்பதே ஒரு முழுமையான புரட்சியாகி விடாது. ஒரு புரட்சியின் பணிகளை அது சாதித்து விடாது.

ஆனால் எந்தப் புரட்சியும் பயங்கர நடவடிக்கைகள் இன்றி முழுமை பெறுவதில்லை என்பது ஒவ்வொரு புரட்சியின் வரலாறும் போதிக்கும் பாடமாகும்.

பயங்கர நடவடிக்கையின் பலன் இது தான்;

யாராலும் தன்னை அசைக்க முடியாது என்று அரசுகள் ஏற்படுத்தி வைத்திருக்கின்ற, ஒரு மலைப்பை, ஒரு பிரமிப்பை, ஒரு மனத் தோற்றத்தை அது சுக்கு நூறாக உடைத்து சின்னா பின்னமாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீலங்காவிற்குள் இஸ்ரேலிய ஆயுதங்கள்

இஸ்ரேலின் உள்நாட்டு பாதுகாப்பு சேவை (ஷின்-பெத்)யிலிருந்து இலங்கைக்கு இராணுவ அதிகாரிகளும் ஆலோசகர்களும் அனுப்பப்பட்டுள்ளார்கள் என்ற விடயம் இப்போது ரகசியமல்ல.

ஆரம்பத்தில் வெளி வந்தது போல, இஸ்ரேலிய உளவு சேவையான மொசாட்' டிலிருந்து எவரும் அனுப்பப்படவில்லை என்று தெரிகிறது. உள்நாட்டுக் கிளர்ச்சிகளை அடக்குவதிலும், கெரில்லா எதிர்ப்பு போர் முறைகளிலும் சிறப்பு தேர்ச்சி பெற்றவர்கள் என்று பொதுவாக 'ஷின்-பெத்' பற்றி குறிப்பிடப்படுகிறது. மொசாட்டைப் போன்று பிரபல்யமாக அறியப் படாவிட்டாலும் மொசாட்டிற்கு எந்த வகையிலும் ஷின்-பெத் தரம் குறைந்தது என்றுசொல்ல முடியாது.

''யூலை 83'' இல் திருநெல்வேலியில் இராணுவ வீரர்களின் மீதான தாக்குதல் ஸ்ரீலங்கா அரசை குறிப்பாக ஜே. ஆர் ஜயவர்த்தனவை அதிர வைத்தது. உடனடியாக இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிடம் ஆயுத உதவி கோரப்பட்டது. இதனை ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா மறுத்தாலும் பல தகவல்கள் மூலம் ஆயுத உதவிகள் கோரப்பட்டமை நிரூபிக்கப்பட்டுவிட்டது. இங்கிலாந்தும் அமெரிக்காவும் நேரடியாக ஸ்ரீலங்காவிற்கு ஆயுத உதவிகளை வழங்கத் தயங்கின.

இதே நேரம் ஸ்ரீலங்கா அரசு, லண்டனில் நிலை கொண்டிருக்கும் தனியார் பாதுகாப்பு நிறுவனங்களை அணுகியது. அந்தத் தனியார் நிறுவனங்கள் நன்கு பயிற்றப்பட்ட முன்னாள் SAS படையினரை கொண்டுள்ளன.

---

விடுதலைத் தாகம் கொண்ட மக்களின் இதய முழக்கத்தை உலகின்முன் ஓங்கி ஒலிக்கச் செய்கிறது.

மேலும், புரட்சி மக்களின் விடுதலைப் பாதையை அடித்துக் கூறுவதற்கு சரியான வழியல்லவோ?

பயங்கர நடவடிக்கைகள்புரட்சியாக வளரும்—புரட்சி சுதந்திரமான அரசியல் பொருளாதார சமூக சுதந்திரமாக மலரும்.

வெறும் துப்பாக்கிகளாலும், வெடிகுண்டுகளாலும் மட்டுமே யாரும் பயனடைய முடியாது என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. இந்துஸ்தான் சோசலிசக் குடியரசின் இராணுவ வரலாறு அதைத் தெளிவாகக் காட்டுகிறது.

சில நேரத்தில், சிலநிலைமைகளில் குண்டுகளை வீசுவது அனுமதிக்கப் படக்கூடியது என்றாலும்கூட, வெறும் குண்டுகளை மட்டும் வீசுவது என்பது முட்டாள் தனமானது மட்டுமல்ல; அநேக தடவைகளில் அது தீங்கு பயக்கக் கூடியதாகும்.

நம்முடைய முக்கிய பணி தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஸ்தாபன நீதியில் ஒன்றுதிரட்டுவது என்பதேயாகும்.

பரந்துபட்ட மக்களின் நலன்களைப் பாதுகாத்தல், நமது இலட்சியக் கனவுகளை நனவாக்குதல், மார்க்சிய கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு புதிய சமுதாயத்திற்கு அடி கோருதல் ஆகிய இப் பணிகள் அரச அதிகாரத்தை உடனேகொடுக்குமாறு நம்மை கோருகின்றன.

வெகு சீக்கிரமே ஒரு முடிவான யுத்தம் துவங்கும் அதனுடைய முடிவு அனைத்தையும் நிட்சயிக்க கூடிய வகையிலே இருக்கும்; ஏகாதிபத்தியம், முதலாளித்துவம் இவற்றின் இறுதி நாட்கள் எண்ணப் படுகின்றன.

நாங்கள் இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டோம். அவ்வாறு செய்ததற்காகப் பெருமையடைகிறோம் ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நிறுவனங்களில் ஒன்றான API (Asset Protection International) என்பது ஸ்ரீலங்கா விற்கு முக்கிய இராணுவ மற்றும் கேந்திர நிலையங்களைப் பாதுகாப்பது தொடர்பாக ஒத்தாசை புரிந்தது. எனினும் லண்டனில் உள்ள நிறுவனங்கள் கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிராததால் போலும் உதவிகளுக்கு அவை மொசாட்டை சிபாரிசு செய்தன.

ஸ்ரீலங்காவின் உளவுசேவைப் பிரிவின் (Intelligence service Dlvision)(ISD) தலைவர் பிறில் ஹேரத் மொசாட் இடம் உதவி பெற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இவர் 1960 இல் மொசாட்டிடம் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் உதவியுடன் ஜே. ஆர் அரசு இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது ஜே. ஆர்.இன் அமைச்சரவைச் செயலாளர் G. V. P சமரசிங்க இரகசியமாக இஸ்ரேலின் தலைநகரான டெல்-அவிவ்வுக்கு சென்று மொசாட்டுடன் பேச்சுவார்தைகள் நடத்தினார். இந்த விடயம் ஜே. ஆர். இன் அமைச்சர்களுக்கோ, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ தெரியாமல் இரகசியமாகப்பேணப்பட்டது. சிரேஷ்ட அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கும், ஜே. ஆரின் அந்தரங்க அமைச்சர்களுக்குமே இது தெரிந்திருந்தது. இந்தப் பேச்சு வார்த்தைகள் 83 ஆகஸ்டில் இருந்து பத்து மாதங்கள் நீடித்தன. இனப்பிரச்சினையை அரசியல் ரீதியாக தீர்ப்பதாகப் பாவனை செய்து உலக நாடுகளையும், தமிழ் சிங்கள மக்களையும் ஏமாற்றியது ஸ்ரீலங்கா அரசு. இதே காலப் பகுதியில் சாத்தியமான சகல வழிகளிலும் தனது இராணுவம், கடற்படை, விமானப்படை என்பவற்றை நவீன மயப்படுத்தியது.

இஸ்ரேலுடனான தனது இரகசியத் தொடர்புகள் வெளித் தெரிய வந்தால் அணி சேரா நாடுகளில் இருந்துவரும் கண்டனங்களை எதிர் நோக்க அஞ்சி, ஒரு வர்த்தக உடன்படிக்கை செய்து கொள்வதன் மூலம் ராணுவ உறவுகளை மூடி மறைக்க ஸ்ரீலங்கா அரசு முயன்றது. எனினும் இஸ்ரேலுக்கு இம்மூடி மறைப்புகளிலோ, அல்லது உடன்படிக்கை மூலம் கிடைக்க விருக்கும் பணமோ பெரிதாக இருக்க வில்லை. முழு அளவிலான இராஜதந்திர உறவுகளை—அதாவது தனது தூதரகத்தை மீண்டும் திறப்பதிலேயே அது குறியாக இருந்தது. கடந்த மார்ச் மாதம் இஸ்ரேல் நலன் பேணும் பிரிவு ஒன்று ஸ்ரீலங்காவில் அமைக்கும் உடன்பாடு ஏற்பட்டது!

ஸ்ரீலங்காவில் உள்ள அமெரிக்கதூதரகம், இன்னொரு மேலை நாட்டை (பிரான்சு அல்லது ஜேர்மனி) இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவை வைத்திருக்கும் படி செய்த முயற்சிகைகூடாததால், தானே அப்பொறுப்பை ஏற்க வேண்டி ஏற்பட்டது. இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒன்றும், இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஒன்றுமாக இரண்டு ஒப்பந்தங்கள் பின்னர் கைச்சாத்திடப்பட்டன.

இதன் பின்னர் கொழும்புக்கும்- டெல் அவிவ்வுக்கும் இடையே ஒழுங்காக விமானப் போக்குவரத்துகள் நடைபெறுகின்றன. பெயர் பொறிக்கப்படாத இஸ்ரேலிய ஹேர்குலிஸ் விமானங்களில் ஸ்ரீலங்காவிற்குள் ஆயுதங்கள் வந்து குவிகின்றன. ●

---

● பிரிட்டன் பத்து யுத்தக்கப்பல்களை விற்கவிருக்கிறது. நவீன கருவிகளை கொண்ட இந்த யுத்தக்கப்பல்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. இதன் பெறுமதி என்ன தெரியுமா? ஒரு கப்பலின் விலை நான்கு கோடி ரூபாவாகும்! இக்கப்பல்களை எவரும் எளிதில் செலுத்த முடியாது. இதற்காக பிரிட்டன் விசேஷ பயிற்சியையும் இலவசமாக அளிக்கப் போகிறது. இது மட்டுமல்ல, அயர்லாந்திலும் பிரிட்டனிலும் பயங்கரவாதிகளுக்கு எதிராக பயன்படுத்தப்படும் கவச வாகனங்கள், மற்றும் நவீன ஆயுதங்களையும் பிரிட்டன் விற்பனை செய்யப்போகிறது.

கொள்வனவு செய்யவுள்ள நாடு: இலங்கை

(6-2-85 ஈழநாடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான பூர்வமான கல்வியும்,

# தமிழ் மாணவர்களின் திசை மார்க்கமும்

அண்மைக் காலங்களில் அடுத்தடுத்து பாடசாலைகளில் நடைபெற்ற ரோனியோ மெசின் கொள்ளை, தட்டச்சு இயந்திரக் கொள்ளை என்பவற்றைத் தொடர்ந்து பாடசாலை மாணவ பிரதிநிதிகளாலும், ஆசிரியர்களாலும் கண்டன அறிக்கைகள் வெளியிடப்பட்டன. தமிழ் தினசரிகளில் அவர்களது உருக்கமான வேண்டுகோள்களும் வெளியாகின. பத்திரிகை ஆசிரியர்களும் தம்பங்கிற்கு மாணவர்களுக்கு கல்வி மட்டுமே ஒரே நம்பிக்கையான எதிர் காலத்தை தருவது, அதை முறியடிக்க வேண்டாம், யாழ்ப்பாண மக்களின் வழி காட்டும் ஒளிவிளக்கை அணைத்திட வேண்டாம், என்றெல்லாம் தலையங்கங்கள் எழுதினார்கள்.

இங்கு அடிக்கடி இப்படியான கொள்ளைகள் நடைபெறுவதும் அவற்றை ஒட்டி கண்டனங்களும் வேண்டுகோள்களும் வெளியாவது பற்றியும், இது எமது போராட்டம் இன்னமும் மக்கள் போராட்டமாக பரிணமித்து விடாமையை காட்டுகிறது என்றும், எமது நாலாவது இலக்கில் குறிப்பிட்டிருந்தோம். இப்போதும் நாம் இந்த பாடசாலைகளில் நடைபெற்ற கொள்ளைகள் பற்றி இங்கு குறிப்பிட்டிருப்பது, அந்த கொள்ளைகளை ஒட்டி மாணவர்களது கல்வி சம்பந்தமாக வெளியிடப்பட்ட கருத்துக்களை முன்னிட்டேயாகும். இத்தகைய உருக்கமான வேண்டுகோள்களும், கண்டனங்களும் மேலோட்டமாகப் பார்க்கும் போது சரியானவை போலவும், நியாயமானவை போலவும் தெரியக்கூடும். ஆனால் சற்று ஆழமாக நாம் இதுபற்றி சிந்திப்போமானால், இத்தகைய கருத்துகளுக்குப் பின்னால் உள்ள ஒரு முக்கியமான விடயத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இப்பொழுது பாடசாலைகளில் நடைபெற்று வரும் இந்தக்கல்வி முறையானது மிகச் சரியானது என்றும், இதுவே தமிழ் மாணவர்களின் எதிர்காலத்தின் ஒளிவிளக்கு என்றும் இவை திட்டவட்டமாக தெரிவிப்பனவாயுள்ளன. இந்தப் பாடசாலைகளில் போதிக்கப் படுபவைகள், எமது மக்களுக்கும் மாணவர்களது எதிர்காலத்திற்கும் முக்கியமானவை என்பதும், இந்தக் கல்விமுறையை ஏற்றுக் கொள்வதின் மூலம், மாணவர்கள் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தித் கொள்வதற்கான வாய்ப்பு உண்டென்பதுவுமே இக்கருத்துகளுக்குப் பின்னால் உள்ள விடயங்களாகும். இவைமிகவும் மோசடியான கருத்துக்களே என்பதை, எமது மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் அதன் தன்மைகளையும் கூர்ந்து கவனித்தால் புரிந்து கொள்ள இலகுவாக இருக்கும்.

நாம் கொஞ்சம் பின்னோக்கிப் போவோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையை கைப்பற்றி தமது காலனியாக்கிக் கொள்வதற்கு முற்பட்ட காலம் எத்தகைய தன்மை வாய்ந்ததாக இருந்தது? காலனியாதிக்கத்தின் வருகையின் பின் எமது சமூக அமைப்பு எத்தகைய மாற்றங்களைப் பெற்றுக் கொண்டது என்பதை கவனித்தால் இந்தக் கல்வி சம்பந்தப்பட்ட விடயத்தை நாம் இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

எமது நாட்டின் காலனியாதிக்கத்திற்கு முற் பட்ட காலத்து நிலைமைகள் பற்றிய சரியான சரித்திர வரலாறுகள் தற்போது கிடைக்காவிடினும், மன்னராட்சிக் காலத்திய அப்போதைய நிலப்பிரத்துவ வாழ்க்கை முறைமையில் கல்வி எப்படிப் பட்டதாக இருந்திருக்கும் என்பதை புரிந்து கொள்வது அத்தனை கடினமல்ல. காலனியாதிக் கத்தின் பின்னும் தொடர்ந்து 'பூர்வீக கல்வி முறை' அது பற்றி மிகவும் சரியான வரையறையை உருவாக்கிக கொள்ள எமக்கு மிகவும் உதவியாக உள்ளது.

மன்னராட்சிக் காலத்திய கல்வி என்பது, அப்போதைய பிரபுக்களதும், அரசியலாளர்க்கும் மட்டுமே சொந்தமான தாக இருந்தது. குரு சிஷ்ய முறையிலமைந்த இந்தக் கல்வியானதுநிலப்பிரபுத்துவசமூகஅமைப்பின் தன்மைகட் கேற்ப அதைப் பேணுவதற்காக பயன்படுத்தப்படுவதாயும், பாமர உழைக்கும் மக்களுக்கு எட்டாததாகவும் அமைந்திருந்தது. அக்காலக் கல்வியில் பெரும்பாலும் மொழியே முதன்மை பெறுவதாகவும், மருத்துவவம் ஒன்றே பிரதான 'அறிவியல்' விடயமாகவும் அமைந்திருந்தது. ஆயினும் இதுகூட பரம்பை வழியாக ஒரு குறிப்பிட்ட சந்ததியினர்க்கே சொந்தமான பொருளாக சிறைப்பட்டிருந்தது. பொதுவாக சொன்னால், கல்வியானது அந்த சமூக அமைப்பில் நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்கத்தினருக்கு மட்டுமே உரியதாக இருந்து வந்தது. அல்லது அவர்களைச் சார் தோருக்குரியதாயமைந்திருந்தது.

காலனி ஆதிக்கத்தினை தொடர்ந்து இந்த நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பின் அடித்தளங்கள் சிதைக்கப்பட்டன. பிரிட்டிசார் தமது சுரண்டல் நோக்கங்களிற்காக அறிமுகப் படுத்திய சுரண்டல் உற்பத்தி முறைகளுடன் நிலப்பிரபுத்துவ கல்வி அமைப்பும் வழக்கொழிந்து போகத் தொடங்கியது. ஏகாதிபத்திய சுரண்டலிற்கும், அதன் நிர்வாக அமைப்பிற்கும் ஏற்ற விதத்தில் புதிய கல்விமுறை புகுத்தப்படடது நாம் இன்று கற்கும் இந்த கல்விக் கூடங்கள் ஏகாதிபத்திய சுரண்ட லாளர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட கல்வி அமைப்பே அன்றி வேறல்ல.

இந்தக் கல்வி அமைப்பானது, ஏகாதிபத்திய வாதிகள் எமது நாட்டில் தமது 'கொள்ளை' அடிப்பையும், சுரண்டலையும் மேற்கொள்வதற்காக உருவாக்கிய கல்வி அமைப்பாதலால் அது இயல்பாகவே பிற்போக்கான அம்சங்களைத்தன்னகத்தே கொண்டிருந்தது. இந்த 'ஆங்கிலக்' கல்வியானது ஏகாதிபத்திய சுரண்டல் நோக்கங்களிற்கேற்ற நிர்வாகிகளையும், ஊழியர்களையும் தயாரிக்கும் ஒரு வகை 'பட்டறை'யாகவே தொழிற்பட்டுவருகிறது. இது,பழைய நிலப்பிரபுத்துவ கல்வி முறையானது எப்படி பாமர ஏழை உழைக்கும் மக்களை ஒடுக்கும் ஆளும்வர்க்கத்திற்கு சேவை செய்ததோ, அவ்வாறே தற்போதைய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுக்கு சேவை செய்யும் முகமாக உருவாக்கப்பட்டது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் தமது சுரண்டலை நியாயப் படுத்தும் வகையில் பொய்யான வரலாறுகளையும் தமது நோக்கத்திற்கு ஏற்ற விதத்தில் அரைகுறை அறிவையுமே போதித்தார்கள். ஏகாதிபத்தியம், மாமேதைலெனின் சுட்டிக்காட்டிய படி ஐரோப்பிய முதலாளித்துவத்தின் அழுகிப் போன வடிவமாக— இறுதி வடிவமாக— பரிணமித்தது. ஏகாதிபத்தியம் தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கையில் தவிர்க்க முடியாது அரைகுறையாகவேனும் விஞ்ஞானக் கல்வியை ஊட்டவேண்டி இருந்தது. இதன் காரணமாக காலனி நாடுகளில் விழிப்புற்ற மக்களிடையே ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வும் வளரத்தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக்காலனியக் கல்வி அமைப்பானது நிலப் பிரபுத்துவ ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கு மட்டும் சொந்தமாக இருந்த கல்வியை உழைக்கும் மக்கட்பிரிவினர்க்கும் கிடைக்கும் படி செய்ததனால் ஓரளவு முற்போக்கான அம்சத்தை கொண்டுள்ள தாயினும், அது வளர்ந்து வந்த தேசிய இயக்கங்களுக்கும் பாட்டாளி வர்க்க உணர்வுக்கும் எதிரானதா கவே அமைந்தது. இந்தக் கல்வி அமைப் பானது மாணவர்களை மந்தைகளாக—சரியாக சொன்னால் அவர்களைத் தமது ஏகாதிபத்திய சுரண்டலுக்கு உபயோகப் படுத்தும் விதத்தில் தயார் செய்வதற்கே பயன் பட்டது. ஏகாதிபத்தியம் எமது மக்களிடம் இருந்து தனக்கு நல்ல சேவகர்களையும் விசுவாசிகளையும் உருவாக்கிக் கொள்வதற்கு இந்தக் கல்வி அமைப்பை பயன் படுத்தி வந்தது.

1948 ம் ஆண்டு இலங்கையில் நடை பெற்ற மாபெரும் மோசடியான 'புகழ் பூத்த சுதந்திரம்' இந்த நாட்டு மக்களுக்கு எந்த விதமான சுதந்திரங்களையும் வழங்கவில்லை. ஏகாதிபத்திய வாதிகள், தாம் தமது உற்பத்தி நடவடிக்கைகளை அறிமுகப் படுத்திய விடயங்களில் நிலப்பிரபுத்து வத்தின் பிடிகளை உடைத்தும் ஏனைய பகுதி களில் அதனுடன் சமரசம் செய்து கொண்டும் தமது செயற்பாடுகளை நிறை வேற்றினர். இரண்டாம் உலகமாகயுத்தம் சர்வதேச ரீதியில் ஏற்படுத்திய நெருக்கடி, காலனி நாடுகளை நேரடியாக நிர்வகிக்க முடியாமல் தடுமாறும் நிலையைப் பிரிட்டனுக்கு ஏற்படுத்தியது. இதனால் இவர் கள் இங்கிருந்த ஏகாபதித்திய விசுவாசி களான உள்ளூர் நிலப்பிரபுத்துவ வர்க்கத் தினரிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு மறைமுகமான தமது சுரண்டலைத் தொடர வழி செய்யும் விதத்திலேயே இந்தச் சுதந் திரத்தை வழங்கிச் சென்றனர். ஆக இந்தச் சுதந்திரம் பெயரளவில் ஓர் 'ஆட்சிமாற்ற' விவகாரமாகவே அமைந்ததே அன்றி இந் நாட்டு பரந்து பட்ட மக்களுக்கு எந்த விதமான விடுதலையையும் வழங்கவில்லை.

சுதந்திரம் வெறும் 'லேபல்' மாற்றமாக நடந்து முடிந்தபின்னர் அது அப்படி நிகழ்ந்த தன் காரணமாக அதே ஏகாதிபத்தியம் அறிமுகப்படுத்திய நிர்வாக மற்றும் கல்வி விடயங்களையே இந்த நாட்டின் 'சுதேச' அரசுகள் பின்பற்றின. எமது நாட்டின் இன்றைய கல்வி முறை ஒரு சில மிகச் சிறிய மாற்றங்களை (சுதேச மொழி போன்ற) கொண்டிருந்தபோதிலும் அது தொடர்ந்தும் நிலவும் பிற்போக்கு அரசுக்கும், சமூக அமைப்பிற்கும் சேவை செய்யும் நோக்கத் துடனேயே செயல்பட்டு வருகின்றது. பாட சாலைக்குச் சேர்க்கப்படும் மாணவர்கள் பல்கலைக் கழகம் நுழைவையும், அரச உத்தி யோகத்தையும் நோக்கமாகக் கொண்டே வளர்க்கப்படுகிறார்கள். இவர்களது கல்வி இந்த நாட்டிற்கும் மக்களுக்கும் பயன்படும் விதத்தில் அமையவில்லை. இங்குள்ள அரசா னது அசல் ஏகாதிபத்திய விசுவாச சுரண்டல் அரசாக இருப்பதனால், அது இத்தக் கல்வி அமைப்பை மாற்றியமைக்கின்ற, மாணவர் களுக்கு விஞ்ஞான பூர்வமான கல்வியை போதிக்கின்ற செயலைச் செய்யவே இல்லை. மாணவர்கள் மலட்டுத்தனமான இந்தக் கல்வி அமைப்பினால், இந்தப் பிற்போக்குச் சமூக அமைப்பின் நல்ல சேவகர்களாக உருவாக்கப்படுகிறார்கள்.

விஞ்ஞான பூர்வமான கல்வி எனும்போது உண்மையான சமூக நிலைமை பற்றி, வரலாறு பற்றி, சமூகம் வர்க்கங்களாகப் பிளவுண்டு சுரண்டப்படுவோர், சுரண்டுவோர் என்ற முரண்பாட்டின் குவியலாக இருப்பதுபற்றி யெல்லாம் போதிக்கவும் மாணவர்களது உழைப்பையும் ஆற்றலையும் நாட்டின் சுபீட் சத்திற்கும், வர்க்க பேதமற்ற சமூக அமைப்பை உருவாக்குவதற்கும் பயன்படும் கல்வி என்றே அது அர்த்தப்படுகிறது. ஆனால் இங்கோ நிலவுகின்ற இந்தப் பிற்போக்கு சமூக அமைப்பினை நியாயமானது என்றும் அதைப் பாதுகாக்க வேண்டும் என்றுமே போதிக்கப்படுகின்றது. மாணவர்களை செய லற்றவர்களாக உருவாக்கும் இந்தக் கல்வி அமைப்பானது மக்களின் விடுதலைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின சுதந்திரத்திற்கும் எதிராகச் செயற்பட்டு வருகின்றது.

உதாரணமாக 'அரசு' பற்றிய எமது பாடசாலைகளின் போதனையை எடுப்போம். எமது பாடசாலைகளில் 'அரசு' என்பது மக்களால், மக்களுக்காக, மக்களிடம் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் ஆவது என்று போதிக்கப்படுகின்றது. பொலிஸ், இராணுவம், நீதிமன்றம், பாராளுமன்றம் போன்ற அரச இயந்திரங்கள் மக்களுக்காக சேவை செய்வதற்கென்றே கற்பிக்கப்படுகின்றது. இது யதார்த்தத்தில் எவ்வளவு பொய்யானது என்று நாம் அறிவோம். இவை இந்த சமூகத்தின் வசதி படைத்த சுரண்டும் வர்க்கத்தினருக்கு சேவை செய்வதாயும், பரந்துபட்ட மக்கள் திரளினரை ஒடுக்குவதாயும் அமைந்துள்ளமையை நாம் அனுபவித்து வருகிறோம்.

இத்தகைய பொய்யான விடயங்களைப் படிக்கும் ஒரு மாணவன் அரசு நியாயமானதென்றே கருதுவான். அதன் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக போராடும் தன்மையை அவன் அற்றவனாக, அதை ஏற்றுக்கொள்பவனாகி விடுகின்றான். இத்தகைய காயடிக்கப்பட்ட தன்மையை மாணவர்களுக்கு உருவாக்குவதனாலேயே இதை 'மலட்டுக் கல்வி' என்கிறோம். உண்மையில் அரசு என்பதற்குச் சரியான அர்த்தம்—விஞ்ஞான பூர்வமான அர்த்தம்—அது ஆளும் வர்க்கத்தின் ஒடுக்கு முறைக்கருவி என்பதே இந்தநாட்டின் பிற்போக்கு ஆளும் வர்க்கமான நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளிய வர்க்கங்கள் தமது வர்க்க நலன்களுக்கு ஏற்ப பரந்து பட்ட மக்களை ஒடுக்கவே இந்தஅரசு பயன்படுகிறது. அரசு, அது பிற்போக்கு, முதலாளித்துவ, காலனிய, நவகாலனிய அரசாக இருந்தால் என்ன, முற்போக்கு சோசலிச அரசாக இருந்தால் என்ன ,அது ஆளும் வர்க்கத்தின் ஒடுக்கு முறைக்கருவியே. சோசலிச அரசில் அது உழைக்கும் வர்க்கத்தைப் பாதுகாக்கவும், பரந்துபட்ட மக்களின் ஜனநாயகத்திற்கு உத்தரவாதம் செய்யவும், எதிர்ப் புரட்சி சக்திகளான முதலாளித்துவ பிற்போக்காளர்களை ஒடுக்குவதற்கும் பயன் படுகிறது. ஆனால் இந்த விஞ்ஞான பூர்வமான விடயங்கள் எமது மாணவர்களுக்கு கற்பிக்கப் படுவதில்லை. மாணவர்களை ஆய்வு செய்து கல்விகற்கும் விதத்தில், அவர்களது ஆற்றலை வளர்க்கும் விதத்தில் அமையும் இத்தகைய விஞ்ஞானக் கல்வி முறையின்மையால் மாணவர்கள் ஒன்றுக்கொன்று முரணான விடயங்களை ஒரே நேரத்தில் நம்பும் விதத்தில் கற்பிக்கப்படுகிறார்கள். முரண்பாடுகளின் மொத்த உருவமாக குழம்பலின் வடிவமாக திணிக்கப்படும் இந்தப் பிற்போக்கு கல்வி முறையானது நீக்கிரோக் கவிஞன் ஒருவன் சொன்னது போல் ''எமது மாணவர்களை ஆண்மை இழக்கச் செய்து விடுகிறது''

'கஷ்டப்பட்டுப் படித்தால் முன்னுக்கு வரலாம்' என்ற வாசகம் தமிழ் மக்களுக்கு மிகவும் பரிட்சயமானது. கல்விகற்கும் அனைத்து மாணவர்களும் முன்னுக்கு வரமுடியும் என நம்பிக்கை யூட்டும் இந்தக் கல்வி அமைப்போ, முற்றிலும் அதற்கு எதிரானதாகவே அமைந்து விடுகின்றது. பல லட்சக் கணக்கான மாணவர்கள் ஆரம்பப் பாடசாலைகளில் கற்கத் தொடங்கிய போதும் ஒரு சில ஆயிரக்கணக்கான மாணவர்களே பல்கலைக் கழகம் செல்கின்றனர். 'மாணவர்களின் பிரச்சினை' என்று குறிப்பிடுகையில் இன்றெல்லாம் 'மாணவர்களின் பல்கலைக்கழகம் அனுமதி' பற்றிய பிரச்சினையே பிரதான இடம் வகிக்கிறது. ஆனால் அதற்கு முன்பே கல்வி வாய்ப்புகள் மறுக்கப்பட்டு விட்ட லட்சக் கணக்கான மாணவர்களைப் பற்றி இங்கு பேசப்படுவதே கிடையாது. பல லட்சக் கணக்கான மாணவர்கள் வறுமை காரணமாகவும், இன்னும் பல லட்சம் மாணவர்கள் திட்டமிடப்பட்டகல்வி அமைப்பின்மையாலும் கல்வி கற்கும் உரிமை மறுக்கப்படுகிறார்கள்.

இந்த அரச நிர்வாகம் தனக்கேற்ற நல்ல ஊழியர்களை உருவாக்கும் நோக்கில் தயார் செய்யும் மாணவர்கள் போக, மாணவர் சமுதாயத்தின் மிகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய பகுதியினர் நட்டாற்றில் விடப் படுகிறார்கள். அவர்கள் திறமைகளோ, ஆர்வமோ மதிக்கப்படுவதோ, பயன்படுத்தப் படுவதோ கிடையாது. ஏனென்றால் இந்த அரசுக்கும், சமூக அமைப்பிற்கும் அந்தகைய நோக்கங்கள் இல்லை. இந்த சமூகத்தின் வாய்ப்புகளை அனுபவிக்கும் சுரண்டலாளர்கட்கு தேவையான விசயங்களை தயாரித்து தருவது மட்டுமே மாணவர்களிடம் இருந்து எதிர்பார்க்கப் படுகிறது. நாட்டை வளமாக்குவதோ, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோ, மக்களின் பூரண சுபீட்சத்தையும் சுதந்திரத்தையும் உருவாக்குவதோ இந்த சுரண்டலாளர்களின் நோக்கமல்லவே. எனவே தான் இத்தகைய பிற்போக்கு கல்வி அமைப்பு தொடர்ந்து நிலவுவதை அவை விரும்புகின்றன.

இனி எமது தமிழ்மாணவர்களின் பிரச்சனைகளிற்கு வருவோம். தமிழ்மாணவர்களைப் பொறுத்த வரை இவர்கள் இரண்டு விதமான ஒடுக்கு முறைக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். ஒன்று, மேலே விவரித்த விஞ்ஞான பூர்வமற்ற கல்வியினால் மாணவ சமுதாயத்திற்கு பொதுவாக ஏற்படுத்தப்படும் அநீதி. மற்றையது, இந்த சமூக அமைப்பின் கீழ், இதே சுரண்டல் வடிவங்களின் கீழ் இனரீதியாக தமிழ் மாணவர்கள் மீது காட்டப்படும் பாரபட்சம்.

இதில் தற்போது பரவலாக இரண்டாவது விசயம் பற்றிய பேச்சே முதன்மையானதாக இருக்கின்றது, அடிபடுகின்றது. எமது இரண்டாவது இலக்கில் பல்கலைக்கழக மாணவர் போராட்டம் சம்பந்தமான கட்டுரையில் இது பற்றி சுருக்கமாக குறிப்பிட்டிருந்தோம். ஆனால் இந்த இரண்டாவது பிரச்சினை இன்று முதன்மை பெற்றபோதும், இதன் அடிப்படைக்காரணமாக அமைந்திருப்பது முதலாவது பிரச்சினைக்கான நிலைமைகளே என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அதைக் கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்.

தற்போது இங்கு நிலவி வருவது ஏகாதிபத்திய சார்பு பிற்போக்கு அரசாகும்; இங்குள்ள அரை நிலப் பிரபுத்துவ தன்மையும் அரைக் காலனித்துவத் தன்மையும் கொண்ட எமது சமூக அமைப்பை புதிய காலனி வடிவில் ஏகாதிபத்தியங்களின் சுரண்டலிற்கு விட்டு, அவற்றிற்கு சார்பாக பரந்து பட்ட (தமிழ், சிங்கள) மக்களை ஒடுக்குகின்ற அரசாகும். இந்த அரசு தனது ஒடுக்கு முறையையும், ஏகாதிபத்திய சுரண்டலையும் தொடர்ந்து பேண வேண்டுமாயின் விஞ்ஞான பூர்வமற்ற மலட்டுக் கல்வியை மாணவர்களுக்கு ஊட்டி தனது சார்பாளர்களாக அவர்களை உருவாக்குவது அவசியமாகும். மாணவர்களுக்கு விஞ்ஞான பூர்வமான கல்வி ஊட்டப்பட்டால் அது இந்த சுரண்டலாளர்கட்கு எதிராக மாணவர்களை விழிப்படைய வைக்கவும், இப் பிற்போக்கு அரசை தூக்கி எறிய அவர்களைத் தூண்டவும் செய்யும் என்பதை அறிந்தே திட்டமிட்ட இப் பிற்போக்கு கல்வி அமைப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இந்த சமூக அமைப்பை தொடர்ந்து பேணவும், ஏகாதிபத்திய சுரண்டலை தொடர்ந்து நடத்தவும், சிங்களத்தரகு முதலாளிய நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்கங்கள் இந்த சுரண்டலின் லாபங்களை தமது ஏகபோகமாக்கிக் கொள்ளவுமே தமிழ் தேசிய இனம் மீதான பிரச்சினை ஆழப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் மூலம் இந்நாட்டில் ஒரு சோசலிச முகாம் உருவாகுவதை தடுப்பதற்குத் தக்க விதத்திலேயே இந்தத் தேசிய இன ஒடுக்கு முறை தீவிரப் படுததப்பட்டு வருகிறது. சிங்கள ஆளும் வர்க்கங்கள் தமக்கு சார்பான அனைத்து சிங்கள மக்களையும் அணி திரட்டும் நோக்கிலேயே கல்வி, வேலைவாய்ப்பு போன்ற விடயங்களில் ஒடுக்கு முறைகளை அதிகமாக முடுக்கிவிட்டுள்ளது இதன் மூலம் சிங்கள நடுத்தர வர்க்கத்தினரை தன்பால் வென்றெடுப்பதில் சிங்கள ஆளும் வர்க்கங்கள் வெற்றி பெற்றுள்ளன.

தமிழ் மாணவர்கள் மீதான பாராபட்சமும் இத்தகையதே. தமிழ் மாணவர்கள் கல்வி வாய்ப்புப் பறிப்பு, கல்வி கற்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பின்மை போன்றன இதன் விளைவுகளே. எனவே, அடிப்படைக் காரணமாக அமைவது இந்த ஏகாதிபத்திய சுரண்டல் அமைப்பே அன்றி வேறல்ல என்பது தெளிவு. அத்துடன் தமிழ் மாணவர்கள் மீதான பாரபட்சங்கள் இந்த சுரண்டல் அமைப்பின் கீழ் தீர்க்கப்பட முடியாதவை என்பதை நாம் மறந்துவிட முடியாது.

தமிழ் மாணவர்கள் தமது கல்வியுரிமையை வென்றெடுக்கவும் பாதுகாப்பாகக் கல்வியை கற்கவும் இந்த சுரண்டல் அமைப்பின் கீழ் வெற்றி பெறுவது சாத்தியமில்லை. தமிழ் மக்களின் தேசிய விடுதலையூடாகவே இந்த நோக்கம் நிறைவேற்றப்படுதல் சாத்தியமாகும். ஆனால் அமையப்போகும் தமிழீழமும் இன்னொரு ஏகாபத்திய சார்பு சுரண்டல் அமைப்புக் கொண்ட தமிழீழமாக அமையுமாயின் இந்த இரண்டாவது இனரீதியான பிரச்சினை தமிழ் மாணவர்களுக்கு இல்லாது போயினும் மாணவ சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினை தீர்க்கப்பட முடியாததாகி விடும். அதாவது, திரும்பவும் அதே சுரண்டல் அமைப்பின் சேவகர்களாக மாணவர்களைத் தயார் செய்யும் நிலைமையும், பல லட்சக் கணக்கான மாணவர்களின் எதிர் காலம் பற்றிய எந்தவித உத்தரவாதமும் அற்ற நிலையில் கைவிடப் படுவதும் தொடரும். ஏனென்றால், மாணவர்களுக்கு விஞ்ஞான ரீதியான கல்வியைப் போதிக்கவும், நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுள்ள விதத்தில் அவர்கள் கல்வியைப் பயன்படுத்தவும் அத்தகைய பிற்போக்கு 'அரசு' முயலப் போவது கிடையாது. அது தனது சுரண்டல் நோக்கங்களிற்காக இந்த முறையையே பின்பற்றும்.

அமையப் போகும் தமிழீழம், புரட்சிகரமான, ஏகாதிபத்தியங்களின் சுரண்டல்களில் இருந்து முற்றாக தன்னை விடுவித்துக் கொண்டுள்ள ஒரு தமிழீழமாகச் செயற்படும் போது மட்டுமே மாணவர்கள் விஞ்ஞான பூர்வமான கல்வியைக் கற்கவும், மாணவ சமுதாயம் தனது முழுமையான கல்வி உரிமையைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். ஆனால் ஏகாதிபத்தியங்களை உறுதியாக எதிர்த்தும் எமது தேசத்தின் சுதந்திரத்தையும், இறைமையையும் காக்க விடாப் பிடியாகப் போரிட்டும் எமது தேசிய விடுதலையை வென்றெடுக்க உழைக்கும் மக்களின் தலைமையிலான புரட்சிகர மக்கள் யுத்தம் ஒன்றே சரியான வழியாகும். தொழிலாளர் விவசாயிகள் தலைமையில் பரந்துபட்ட மக்கள், உள்நாட்டு ஆளும் வர்க்கங்களுக்கு எதிராகவும் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகவும் நடாத்தும் புதிய ஜனநாயகப் புரட்சியே உண்மையானதேசியவிடுதலையை வென்றெடுக்கும் ஒரே யுத்த தந்திரமாகும். இதன் மூலம் அமையும் மக்கள் ஜனநாயக அரசே மாணவர்களுக்கு, விஞ்ஞான பூர்வமான கல்வியை வழங்க முடியும். மாணவ சமுதாயத்தின் கல்வி உரிமையைப் பூரணமாக வழங்க முடியும்.

தற்போது நிலவும் பிற்போக்கு சுரண்டல் சமூக அமைப்பினை முழுமையாக மாற்றியமைக்க ஆட்சியதிகாரத்தை தொழிலாளர், விவசாயிகள் தலைமையிலான பரந்து பட்ட மக்கள் தமது கரங்களில் எடுத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும். இச்சமூக அமைப்பின் மாற்றமே உண்மையான விடுதலைக்கு வழி வகுக்க முடியும். எனவே மாணவர்கள் தமது உரிமைகள் இந்த சமூகப் புரட்சியின் ஒரு அம்சமாகவே வென்றெடுக்கப் படலாம் என்பதை மறந்து விடக்கூடாது.

தற்போது நடை பெற்றுக் கொண்டிருக்கும் தேசிய விடுதலைப் போராட்டம் சம்பந்தமாக தமிழ் மாணவர்கள் மத்தியில் இரண்டு வித போக்குகள் உள்ளன. ஒன்று- போராட்டங்களில் இருந்து ஒதுங்கி இருக்கும் போக்கு. மற்றையது, அதில் உதிரியாக போய்ச் சேர்ந்து கொள்ளும் போக்கு. இந்த இரண்டு விதமான போக்குகளுமே பயனற்றவை. மாணவ சமுதாயத்தின் உரிமைகளைப் பெற்றுத்தர முடியாதவை.

மாணவர்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமான்யிதம்மை ஒரு போர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணம் மிக்க பலமான ஸ்தாபனமாக அணி திரட்டிக் கொள்ள வேண்டும். இந்த மாண வர்களின் ஸ்தாபனம் தமிழ்ழத் தேசிய விடு தலைப் போராட்டத்தை உழைக்கும் மக்கள் தலைமையில் வென்றெடுப்பதன் மூலமே தமது உரிமைகள்பெறப்படல்சாத்தியம் என் பதை உறுதியாகக் கொண்டிருக்க வேண்டும் எனவே உழைக்கும் மக்களைப் போராட்டத் தின் தலைமை சக்தியாக வென்றெடுப்பதற் காக தீவிரமாக உழைக்க வேண்டும். அதே நேரத்தில் பாதுகாப்பான கல்விக்காகவும், மாணவர்கள் மீதான ஒடுக்குமுறைக் கெதிரா வும் அனைத்து மாணவர்களையும் அணிதிரட்டி உறுதியான போராட்டங்களை முன்னெடுக் கவும் வேண்டும்.

வேறுவார்த்தைகளிற்சொன்னல் தமிழீழ மாணவர்களின் இன்றைய திசைமார்க்கம் தேசிய விடுதலைப்போராட்டத்தினைஒரு புதிய ஜனநாயகப் புரட்சியாக முன்னெடுக்க இலட்சக்கணக்கில் பொதுமக்களைத் தயார் செய்தலே ஆகும். இதனைச் சரிவர நிறை வேற்ற மாணவர்கள் தம்மை ஒரு புரட் சிகரமான போர்க்குண மிக்க ஸ்தாபன மாக்கிக் கொள்ளுதல் அவசியம். இந்த புரட் சிகரமான மாணவர்களின் ஸ்தாபனம் தமிழ் மாணவர்கள் மீதான ஒருக்குமுறைகளுக் கெதிராகவும் தனது பாதுகாப்பான கல்விக்காவும் தொடர்ச்சியான போராட் டங்களை முன்னின்று நடாத்தும். இதன் மூலம் பரந்துபட்ட மக்களின் போராட் டத்துடன் தன்னை ஐக்கியப் படுத்திக் கொள்ளும். இத்தகைய மாணவர்கள் ஸ்தாபனம் ஒன்றின் வழிகாட்டலில் அணிதிரண்டு கொண்டிருக்கும் மாண வர்களால் மட்டுமே மாணவர்களுக்கான உரிமையை வென் றெடுப்பதில் உறுதியாக நின்று செயற்படமுடியும்.

இறுதியாக நாம் ஆரம்பத்தில் குறிப் பிட்ட கல்வி முறைபற்றி பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் பற்றி குறிப்பிட்டு முடிக்கலாம். இந்த வகையான வேண்டு கோள்களும் கண்டனங்களும் இந்தப்

---

● மனித இனத்தின் அன்பு என்று அழைக்கப் படுவதை பொறுத்த வரையில் மனித இனம் வர்க்கங் களாகப் பிரிவுற்றதில் இருந்து இத் தகைய அனைத்தையும் தழுவும் அன்பு எதுவும் இருந்ததில்லை. கடந்த காலத்திய ஆளும் வர்க்கங்கள் எல்லாம் அதை எடுத்து வாதிடு வதில் மிகப் பிரியமுள்ளவையாக இருந்தன. ஞானிகள் அறிவாளிகள் என அழைக்கப்பட்டோர் பலரும் இப்படியே இருந்தனர். ஆனல் எவரும் எப்போதும் அதை உண்மையில் கடைப் பிடிக்கவில்லை. ஏனெனில் வர்க்க சமுதா யத்தில் அது அசாத்தியம். மனித குலத் தின் உண்மையான அன்புஇருக்கும்— உல கெங்கும் எல்லா வர்க்கங்களும் இல்லா மற்செய்யப்பட்ட பின்னர். வர்க்கங்கள் சமுதாயத்தை பல விரோதப் பாங்கான கோஷ்டிகளாக பிரித்துள்ளன. வர்க் கங்கள் இல்லாமற் செய்யப்பட்டதும்— முழுமனித குலத்திலும் அன்பு இருக்கும். ஆனல் இப்போது அல்ல. நாம் எதிரிகளை நேசிக்க முடியாது! சமுதாயத்தீமைகளை நேசிக்க முடியாது. அவற்றை ஒழிப்பதே நமது நோக்கம். இது பொது அறிவு.

■

● அரசியல் என்பது, அது புரட்சிகா மானதோ அல்லது எதிர்ப் புரட்சி கரமானதோ, ஒரு சில தனிப்பட்ட வர்களின் நடவடிக்கையோ அல்ல; மாருக ஒரு வர்க்கம் மற்றெரு வர்க் கத்தை எதிர்த்து நடத்தும் போராட்ட மாகும்.

-மாவோ

---

பிற்போக்கு கல்வியமைப்பை நியாயப் படுத் துபவையாக அமைந்திருந்தன என்பதை குறிப்பிடவே நாம் இதைக் கூறினேம். ஆனல் இத்தகைய கொள்கைகள் சரியா தவரு என்ற கேள்விக்கான ஒரு பதிலை அளிப்பதற் காக அல்ல என்பதை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்ருேம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராடுவதே வழியெனத் துணிந்தோம்!

ஓராண்டு காலமாக இழுத்தடிக்கப்பட்டு வந்த பேச்சுவார்த்தை நாடகம் எதிர்பார்த்த படியே புஸ்வாணமாகிப் போய் விட்டது இலங்கை அரசு தனது இனவெறி இராணுவ நடவடிக்கைகளுக்குரிய தயாரிப்பு வேலைகளில் ஈடுபடுவதற்கு தேவைப்பட்ட கால அவகாசத்தை இந்த பேச்சுவார்த்தை இழுத்தடிப்பின் மூலம் பெற்றுக் கொண்டுவிட்டது. தன்னை சகல வழிகளிலும் தயார் செய்து கொண்டு, தனது இராணுவத்தை நவீன மயப் படுத்திவிட்ட பின் இப்போது பேச்சுவார்த்தையை எவ்வித 'பயனுள்ள தீர்வுகளையும்' முன்வைக்காது நிறுத்திக் கொண்டு விட்டது. மாவட்ட சபைகளுக்கு மேல் எந்தவொரு சிறிய அதிகளவு அதிகாரங்களையும் வழங்கத் தயாரில்லை என்பதை பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் கால கட்டங்களில் பலதடவைகள் குறிப்பிட்டு வந்துள்ள போதும், பேச்சு வார்த்தையை தொடர்ந்து நடாத்தி வந்தது.

இன்று பேச்சுவார்த்தை முடிவின்பின் கூட்டணியை சாட்டாகக் காட்டி தனது பேச்சுவார்த்தை 'முடிவினை' நடைமுறைப் படுத்த முடியாது என திட்ட வட்டமாக அறிவித்தும் விட்டது. சிங்கள இனவெறி நிலப்பிரபுத்துவ மல்வத்த அல்கிரிய பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களின் பேரினவாத கூச்சல், சிறில் மத்தியூ கோஷ்டியின் துவேச நடவடிக்கைகள் ஏகாதிபத்திய ஏவல் நாய்களான தரகு முதலாளிய திருக்கூட்டத்தின் சனநாயக, விரோத போக்குகள் என்பவற்றைப் பாதுகாக்கும் விதத்தில் முடிவுகள் நடைமுறைப் படுத்தப் போவதில்லை என அறிவித்து விட்டது அரசின் இந்த நடவடிக்கைகளை தமிழீழ மக்களும் அனைத்துலக சனநாய சக்திகளும் எதிர்பார்த்த போதிலும் எமது கூட்டணி 'செயல்வீரர்களின்' தளபதி அமிர்தலிங்கம் அவர்கள், பேரதிர்ச்சியடைந்துள்ளதாக அறிவித்துள்ளார். பேச்சுவார்த்தை என்ற நாடகம் வெற்றிகரமாக திட்டமிட்டபடி மேடையேற்றப் பட்டு விட்ட போதும், நாடகமேடையில் நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்த கூட்டணி, ரசிகர்களிடம் 'அப்ளாஸ்' கைத்தட்டல் வாங்கமுடியாமல் போய் விட்டது மிகவும் அதிர்ச்சிகுரியதே. எனவே இந்த கூட்டணியினர் அதிர்ச்சியடைவதில் வியப்பில்லை.

தமிழீழ மக்கள் மீது அமெரிக்காவினதும் அதன் சார்பு வல்லரசுகளினதும் ஏகாபத்திய விஷப்பற்கள் மேலும் அதிகமாக இறுகுவதற்கு வாய்ப்பளித்த புண்ணிய கைங்கரியத்தைத் தவிர இந்த வட்ட மேசை மகாநாடு வேறெந்த விடயத்தையும் சாதித்து விடவில்லை. ஆரம்ப முதலே மாவட்ட சபைகளே, அவை கொண்ட ஒற்றையாட்சி முறைமையே தமிழ் மக்களுக்கான அதிகபட்ச தீர்வு என திரும்பத் திரும்ப அரசு கூறிவந்த பின்னும், பேச்சு வார்த்தையின் போது அது ஒரு தேசிய இனத்தின் பிரச்சினை பற்றியது — ஒரு நாட்டின் ஒற்றுமைக்கான மிகவும் முக்கியமான உயிர்ப்பிரச்சினை பற்றியது — என்ற பொறுப்புணர்வு ஏதுமின்றி வெறுமனே ஏமாற்று வித்தையாக கையாளப்பட்ட பின்பும் இந்திய அரசின் வேண்டுகோளுக்காக, கோட்டாத் தரகர் கூட்டம் இந்த மகத்தான புகழ் பூத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தையில் அக்கறையுடன் ஈடு பட்டு வந்தது ஒன்றும் வியப்புக்குரியதல்ல. எப்பாடுபட்டாவது, எதை அடைவுவைத் தாவது தமது வர்க்க நலன்களையும் அதிகார வாய்ப்பையும் மீளப் பெற்றுக் கொள்ளவே இக்கூட்டணி கும்பல் முயன்று வந்தது.

நாம் மிக ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்டியது போல இந்த இடைக்காலத்தில் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட ஒடுக்குமுறைகள் மிகவும் தீவிரமடைந் ததுடன் ஆயுதமேந்திய புரட்சிகர மக்கள் யுத்த மொன்றே இப்பிரச்சினைக்கான ஒரே தீர்வு என்பது மேலும் உறுதியாகியுள்ளது. ஒடுக்குமுறையாளர்களோ, ஏகாதிபத்திய சுரண்டலாளர்களோ ஒருபோதும் எந்தக் காலத்திலும் ஒடுக்கப்படும் மக்களுக்கு மனமு வந்து விடுதலை வழங்கியதாக வரலாறு கிடையாது. போராடிப் பெறுவதேசுதந்திரம்' இரந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பொருளல்ல சுதந்திரம் என்பதை உணர்ந்துள்ள தமிழீழ மக்கள் இந்தப் பேச்சுவார்த்தை பற்றியோ அதன் மாநில சுயாட்சி கனவுகளையோ நம்பி விடாது புரட்சிகர மக்கள் யுத்தப்பாதையில் அணிதிரளத் தொடங்கியுள்ளனர்.

எந்தக் காலத்திலும் தமிழீழ மக்களது சுயாதிபத்தியத்தையோ விடுதலையையோ பற்றி அக்கறையற்றவர்களாக, ஆரம்பகாலம் முதலே ஏகாதிபத்திய எசமானர்களின் நல்ல விசுவாசிகளாக செயல்ப்பட்டுவந்த இந்தக் கூட்டணியினர் மீண்டும் இந்திரா போனபின் ராஜீவிடம் பேச்சுவார்த்தைக்குத் தொடங் கியுள்ளார்கள். தமிழீழ மக்களின் விடுதலையை பிரிட்டிஷ் மார்க்கிரட் தட்சர் முதல் இன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் வரை பிறநாட்டுத் தலைவர்களின் கையிலிருந்து எதிர்பார்க்கும் கையாலகாதவர்களாக இருக் கிறார்களேயன்றி தமிழீழ மக்களே இவ் விடுதலையை வென்றெடுக்க வேண்டுமென் பதில் எந்தவித அக்கறையோ அதற்கான முயற்சியோ எடுத்தது கிடையாது. அடிக்கடி பத்திரிகைகளில் சும்மாவேனும் அறிக்கை விடுவதன் வாயிலாகவோ, ஏதாவது வீர வச னங்கள் பேசுவதினூடாகவோ, ஜனாதிபதிக்கு தந்தி, தொலைபேசிகளில் செய்தி சொல் வதாலோ தம்மை இயங்குவதாகவும் தாமே இன்னும் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ண யிக்க உள்ள தலைவர்களாகவும் காட்டிக் கொள்ளபகீரத பிரயத்தனம் செய்துவருகிறது இந்தக் கூட்டணி. கூட்டணியென்றால் அமிர் தலிங்கமும் அவரது ஒன்றிரண்டு சகாக்களுமே என்றாகிப்போய்விட்ட இன்றைய நிலையில் இவர்கள் நடவடிக்கைகளைப் பார்த்து தமிழீழ மக்கள் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. தன்மானம், தமிழ் வீரமென்றும் சோசலிசம் இறமை யென்றும் பசப்புவார்த்தைகள் தேடி அரசியல் சூதாட்டம் நடத்திய இந்தக் கூட்டணியினரின் பிற்போக்குத் தனங்களை நன்கு இனங்கண்டுள்ள தமிழீழ மக்கள் இத்தகைய பேச்சுவார்த்தை ஏமாற்றுவித்தை களையெல்லாம் இனியும் நம்பி ஏமாறத் தயாரில்லை. பிற்போக்கு ஏகாதிபத்திய சார்பு தரகு முதலாளிய, நிலப்பிரபுத்துவ கூட்டுச் சதியாளர்களை உறுதியாக எதிர்த்து தமிழீழ தேசிய விடுதலையை வென்றெடுக்கும் புரட்சிகர மக்கள் யுத்தப்பாதையில் முன் னேறவேண்டியஅவசியத்தை அவர்கள் உணர தொடங்கிவிட்டார்கள். இந்தக் கூட்டணி கூட்டத்தினரை நோக்கி தமிழீழ மக்கள் சொல்வதெல்லாம் ஒன்றுதான். தமிழீழக் கவிஞன் ஒருவனின் வரிகளில் சொன்னால்

"மரணத்தை அஞ்சும்
வலிமையை இழந்தோம்
துயரைப் பல மாய்
மாற்றவும் அறிந்தோம்.........
போராடுவதே
வழி எனத்துணிந்தோம்!"

## 2. நவகாலனியத்தின் 'பாணி' இறக்குமதிகள் !

காலனியாதிக்கத்தின்கீழ்ப்பட்டிருந்தமூன் றும்மண்டல நாடுகளில் ஏகாதிபத்தியச் சுரண் டல்முறைமைகள் இன்று புதியகாலனி வடிவம் எடுத்துள்ளதை அனைவரும் அறிவர், இந்த புதியகாலனியவடிவமூலம் ஏகாதிபத்தியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் தேசியகூட்டுகம்பனிகளூடாகவும்,நாணய நிதியங்களினூடாகவும், சந்தை முறைமை களூடாகவும் இன்னும் பல்வேறு வழிகளினூ டாகவும், உள்நாட்டு தரகு முதலாளிய வர்க் கத்தினரின் கைகளினூடாகவும் மிகவும் மோச மான கொள்ளையிலும், உழைப்புச் சுரண்ட லிலும் ஈடுபட்டு வருகின்றன. நவகாலனிய முறைமையானது மூன்றும் மண்டல நாடுகளை ஒட்ட உறிஞ்சி ஓடாக்கி விடும் விதத்தில் தீவிரமாக அந்நாடுகளை கருவறுத்து வருகின் றது. மக்களது வாழ்க்கைத்தரம் வீழ்ச்சி யடைவதும், பஞ்சமும் பட்டினியும் மேலோங் குவதும்வேலையற்றோர்தொகைவளர்ச்சியடை வதும் இந்த நாடுகளில் நாளாந்த பத்திரி கைச் செய்திகளாகி வருகின்றன. இந்த நாடு களில் ஒடுக்கப்படுகின்ற மக்களது போராட் டங்கள் நெருக்கடிகளை சமாளிக்க முடியாத நிலையில் வெடிக்கின்ற போதெல்லாம் ஆயுதங் களும் ஏகாபத்திய வாதிகளால் விற்பனை செய்யப்படுகின்றன. சுரண்டிக் கொழுக்கும் ஏகாபத்தியங்கள், தமது சுரண்டலின் காரண மாக எழுகின்ற போராட்டங்களை நசுக்குவ தற்கு ஆயுதங்களை விற்பனை செய்வதும் தமது கொள்ளையை நடாத்துவதும் நடை பெற்று வருகின்றது.

அனைத்து விடயங்களுக்கும் ஏகாதிபத்தி யங்களையும் அவற்றின் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கும் தரகு முதலாளிய கும்பல் தனது வர்க்க நலனுக்காக தனது நாட்டு மக் களை பலி கொள்வதற்கு இத்தகைய ஆயுதங் களை வாங்கிக் குவிக்கின்றன. சிறீலங்கா சிங் கள் இனவெறி தரகு முதலாளிய பிற்போக்கு கும்பல், தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முற்றாக அழித்தொழிக்கும் நோக்கில் பல வகையான நவீன ஆயுதங்களை யும், விசைப்படகுகளையும் வாங்கிக் குவித் துள்ளது. ஆனால் இப்போது ஏகாதிபத்தி யங்கள் தமது நவகாலனிய நலன்களுக்காக மக்களை நசுக்குவதற்கான போர்த்தந்திரங் களையும் யுக்திமுறைகளையும் கூட இறக்குமதி செய்ய ஆரம்பித்துள்ளன. இங்குள்ள ஏகாதிபத்திய காவல் நாய்களின் அரசும் இவற்றை மனமுவந்து இறக்குமதி செய்ய ஆரம்பித்துள்ளது. அண்மையில்எதிர்ப்புரட்சி சதிவேலைகளில் ஈடுபடுவதுபற்றி அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மத்திய புலனாய்வு (CIA) நிறுவனத்தின் கையேடு, பத்திரிகைகளில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது.

இலங்கையின் இந்த யு. என். பி. அரசு தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க உலகவரலாற்றின் கறைபடிந்த பகுதி களுக்குப் பொறுப்பாகவுள்ள நாடுகளிட மிருந்து உத்திமுறைகளை இறக்குமதி செய்ய தொடங்கிற்று. இஸ்ரேலிய சியோனிஸ்டு களிடமிருந்து அது 'இஸ்ரேலிய' பாணி அழித் தொழிப்பு நடவடிக்கைகளை கற்றுக் கொண் டது. தென்னாபிரிக்க பேயரசிடமிருந்து 'இனவெறியை' கற்றுக் கொண்டது. இன்று தமிழீழ கெரில்லாக்களை அழிக்க 'மலேசியப பாணி' முறையை கையாளப் போவதாக கூறிவருகிறது. ஆயுதமேந்திய முப்பதினாயிரம் சிங்களாக்காடையரை (சிங்கள மக்களாம்! பாவம் சிங்களமக்கள்) தமிழ்ப்பிரதேசங்களில் குடியேற்றுவது, கிராமங்களை சூறையாடுவது, உயிருடன் தீயிடுவது போன்ற புதுப்புதுப் 'பாணி' களை இன்று இந்த 'நவகாலனி யத்தின் அறிமுகப்படுத்தல்களாக நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

எத்தகை 'பாணிகள்' நவகாலனியத்தின் இறக்குமதிகளாகவந்த போதும் இலங்கை அரசும்சரி, அதன் பந்தோபஸ்து அமைச்சரும் சரி, ஒரு விடயத்தை மறந்திருக்கிறார்கள். புரட்சிக்காக எழுச்சியடைந்துவிட்ட மக்களை அழித்தொழிக்க இந்தப் பாணிகள் இன வெறி அரசிற்கு சிலவேளை ''கூடுதல் உதவி'' அளித்துவிடலாமே ஒழிய விடுதலைப் போராட்டம் ஒய்ந்து விடப்போவதில்லை. போராட்டம் வெறுமனே அரசாங்கம் பிரச் சாரம் செய்வதுபோல வெறிபிடித்த சிலரால் தொடங்கப்பட்ட ஒன்றல்ல. இது தமிழீழ மக் களின் உயிர்ப்பிரச்சினையாக, அவர்களின் வாழ்வுப் பிரச்சினையாக வெடித்துள்ளது. இது எத்தகைய தடைகளையும் தாண்டிச்செல் லும் மகத்தான சக்தியுடையது. ஊளிக் காற்றை திரைபோட்டு மறைக்க முயல்கின்ற பேதமைநிறைந்த இந்த அரசின் செயல்கள் அரசை மேலும் மேலும் நெருக்கடிக்குள்ளாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமே அன்றி விடுதலைப் போராட்டத்தை தடுத்து நிறுத்திவிடமுடியாது. எத்தகைய 'பாணி'களை அரசு கையாண்ட போதிலும் அத்தனையையும் ஊடுருவிச் செல்லும் சத்தி பெற்ற 'இராமபாணம்' இது, ஆம்! ஏனென்றால் இது மக்கள் என்னும் மகத்தான சக்தியின் புரட்சிப் போராட்டம்! இது வெல்லப்படமுடியாதது; வெற்றி பெறும்வரை ஓயாதது!

## 3. தெற்கிலிருந்து ஒரு குரல் !

தமிழீழ மக்களின்தேசியவிடுதலைப்போராட்டத்துக் கெதிராகவும்! தமிழின அழித்தொழிப்பிற்காகவும் தீவிரமாக இராணுவ ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது, இந்த அரசு. தேசிய பாது காப்பு (பந்தோபஸ்து) என்ற பெயரில் தமிழ் தேசிய இனத்தையே முற்றாக அழித்தொழிக்கும் நோக்கில் இந்த அரசு செயல்பட்டு வருகின்றது. இந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் அதன் சார்பு வல்லரசுகளினதும் அடிவருடி அரசு தமிழ் மக்கள் மீதுமட்டுமல்லாமல் சிங்கள தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் மீதும் கட்டவிழ்த்து விட்டுள்ள அடக்குமுறைகளை யாவரும் அறிவர். ஆயுதமுனையில் சிங்கள மாணவர்கள் அடக்கப்பட்டதும், பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் பொலிசார் அட்டகாசம் செய்தமையும், சிங்கள இடதுசாரி தீவிரவாத இளைஞர்கள் இராணுவ அடக்குமுறைக்குள்ளானதும் கொழும்புப் பத்திரிகைகளின் விஷேச கவனிப்புக்குள்ளாகாவிட்டாலும், சிங்களமக்கள் மீதும் அரசு கைவைக்க தயங்கமாட்டாது என்பதற்கு நல்ல உதாரணங்களாகும்.

தமிழீழ மக்கள் மீது மோசமான ஒடுக்குமுறைகள், படுகொலைகள், கொள்ளைகள், தீ வைப்புகள் என்றும் வேறு வடிவங்களிலும் வெளிப்படும் போதெல்லாம் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து குறிப்பாக சிங்கள ஒடுக்கப்படும்மக்கள், உழைக்கும்மக்கள்மத்தியிலிருந்து எதிர்ப்புக்குரல்கள் அவ்வளவு பலமாக ஒலிக்காதது, தமிழீழ சனநாயக சக்திகளுக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்ததில்வியப்பில்லை. குறிப்பாக தெற்கின் தொழிற்சங்கங்களின் இத்தகைய அக்கறையற்ற போக்கும் தமிழீழ மக்களிடையேசந்தேகத்தைஎழுப்பியிருந்தது. உதிரி உதிரியாக சில கருத்துக்கள் எப்போதவது முன்வைக்கப்பட்ட போதும் அண்மையில் இருபது தொழிற்சங்கள் ஒன்றிணைந்து வெளியிட்டுள்ள கண்டனக்குரலளவு பலமாக அவை இருக்கவில்லை. இந்த இருபது தொழிற்சங்கங்களின் கூட்டு அறிக்கையானது மிகவும் முக்கியமானதாகவும், அரசை வன்மையாக கண்டனம் செய்வதாகவும் அமைந்துள்ளது

ஸ்ரீலங்கா அரசின் தொழிற்சங்கங்கள் கிட்டத்தட்ட முழுவதுமே பொருளாதார வாதச் சேற்றுள் அமிழ்ந்துள்ளதால் இந்த பிற்போக்குஏகாதிபத்திய சுரண்டல் அமைப்புக்குள் தொழிலாளருக்கு 'நிவாரணம்' தேடும் அமைப்புகளாகவே இயங்கிவருகின்றன இந்த தொழிற்சங்கங்களில் அனேமானவை பல காலகட்டங்களில் தொழிலாளர் வர்க்கத்தைக் காட்டிக் கொடுத்தும், ஆளும் வர்க்கத்துடன் சமரசம் செய்து கொண்டுமுள்ளன என்ற கேவலமான உண்மையை நாம் மறுப்பதற்கில்லை. இந்த நாட்டின் உழைக்கும் மக்களை அவர்களது சொந்த அரசியலதிகாரத்தை வென்றெடுப்பதற்கான புரட்சிகர அரசியலில் ஈடுபட வழிகாட்டுவதற்குப் பதில் திரிபுவாதப் பாதையை சிருஷ்டித்து, முதலாளித்துவ வாதிகளும் தொழிற்சங்கம் அமைக்க வழிசமைத்து தந்த 'வரலாற்றுப் பெருமையை' இங்குள்ள 'இடது சாரி' தொழிற்சங்கவாதிகளும், அரசியல் வாதிகளுமே பெறுகின்றனர்.

ஆயினும், இந்த பிற்போக்குக்கு துணைபோகும்திரிபுவாதத்தொழிற்சங்கதலைமைகள் கூட இன்று அரசுக்கெதிராகஆக்கிரோஷமாக குரலெழுப்பியுள்ளார்கள் என்றால் அது இந்த அரசின் மிலேச்சத்தனமான ஒடுக்குமுறையும் சிங்கள தொழிலாளி வர்க்கத்தின் எதிர்ப்புணர்வினதும்காரணமாகவே என்பதை நாம் மறந்து விடக்கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தொழிற்சங்கங்களின் கூட்டு அறிக்கை தமிழ்மக்கள் மீதான அரச காடைத்தனத்தையும், நாட்டின் இடதுசாரி சக்திகளுக்கெதிரான அடக்குமுறைகளையும் வன்மையாகக் கண்டித்துள்ளது. இராணுவ நடவடிக்கைகளை அரசு வடக்கு, கிழக்கில் மேற்கொள்வது தமிழ் மக்களை நசுக்கவே என்றும், அரசு தொடங்கியுள்ள தேசிய பாதுகாப்பு நிதி சேகரிப்பை கண்டித்து அதை தமிழ் மக்களை நசுக்குவதற்கான ஒரு நடவடிக்கை என்பதால் நிராகரிப்பதாகவும் அறிவித்துள்ளது, அந்த அறிக்கை.

கடந்த காலங்களில் இத் தொழிற் சங்கங்கள் பல தடவைகளிலும் பல வேறு பட்ட சந்தர்ப்பங்களில் 'புரட்சிகரமான' வாய்ச் சொற்களை அள்ளி வீசியிருந்த போதும், இம்முறை தெற்கிலிருந்து வரும் இக்குரல் ஒரு வித்தியாசமான அர்த்தமும், பெறுமதியும் பெறுகின்றது. வழமைபோலவே இந்த அறிக்கையும் 'காகிதப்புலி'யாக அல்லாமல் அரச பயங்கரவாத ஒடுக்குமுறைக் கெதிராக, சிங்கள ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி ஒரு எதிர்ப்பு நடவடிக்கைக்கு தயார் செய்வதற்கான ஒரு ஆரம்பமாக இருக்கவேண்டும் என்பதே தமிழீழமக்களின் எதிர்பார்ப்பாகும்.

## 4. மாநில சுயாட்சி ; ஒரு ஏமாற்று வித்தையே!

சமீப காலங்களில் அடிக்கடி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் என்று பல வேறு தென்னிலங்கை அரசியல் கட்சித் தலைவர்களாலும் அரசியல் விமர்சகர்களாலும், சில புத்திஜீவிகளாலும் எழுதபெற்றுகொழும்பு பத்திரிகைகளில் பல்வேறு கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஏதாவது ஒரு உடனடித்தீர்வு அவசியம் என்பதை வலியுறுத்துவதாக அமைந்துள்ள இக் கட்டுரைகள் ஒரு முக்கியமான விடயத்தை எமக்குணர்த்துவதாய் உள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டம் தோற்றுவித்துள்ள இந்த நெருக்கடியான சூழ்நிலையை 'எப்படியாவது' தீர்த்துவிடவேண்டும் என்ற வேகம் அதிகமாகியுள்ளதென்பதே அதுவாகும். இராணுவ அடக்குமுறைமூலம் இதனை தீர்க்க வேண்டும் என்று தெரிவிக்கும் மிகச் சிலரைத் தவிர பெரும்பாலானோர் 'அரசியல் தீர்வு' என்ற கோஷத்தையே முன்வைத்துள்ளனர்.

இங்குள்ள போராட்டமும் அதுதோற்றுவித்துள்ள நெருக்கடியும் உள்நாட்டிலும் சர்வதேசரீதியிலும் இதற்கான ஒரு அவசரத்தீர்வு செயலாக்கப்படுவதை வலியுறுத்துவதாயுள்ளன. இதனாலேயே குறிப்பாக இந்த 'அரசியல் தீர்வாளர்'கள் 'மாநில சுயாட்சி' 'சமஷ்டிமுறை' என்றெல்லாம் அபிப்பிராயங்களைத் தெரிவித்து வருகின்றார்கள். இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போராட்டத்தையும், அதன் ஆழமான தன்மையையும் ஊன்றிக் கவனிக்க தவறும் இந்தப் 'புத்திமான்'கள் தமது மகத்தான சமஷ்டித் தத்துவத்தை குறிப்பிடுவதில் ஒன்றும் வியப்பில்லை. இங்குள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியும், மற்றும் சில சமரசவாதிகளும் இவற்றிற்கான வாய்ப்புகளையிட்டு கனவு காண்பது நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

ஆனால் உக்கிச் சிரழியும் நிலையிலுள்ள இன்றைய ஏகாதிபத்தியத்தின் நவீன சுரண்டல் வடிவங்களையும், அதிலிருந்தும் அதன் உள்ளூர் காவல் நாய்களிடமிருந்தும் மக்கள் தமது அரசதிகாரத்தை பறித்தெடுத்துக் கொள்வதாகிய மகத்தான புரட்சிக்குரிய இந்தக் காலகட்டத்தில் இத்தகைய சமரச நோய்களையிட்டு மக்கள் அலட்டிக் கொள்ளப்போவதில்லை. மாநில சுயாட்சியோ வேறெந்த விதமான தீர்வோ தமிழீழ மக்களுக்கு விடுதலையையோ, விமோசனத்தையோ தரப்போவதுகிடையாது. இவை தமிழீழத்திலுள்ள பிற்போக்கு ஆளும் வர்க்க சக்திகளுக்கு நாக்கில் ஜலமூறவைக்கும் விடயமாக இருந்த போதும் இங்குள்ள ஒடுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிற மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்கப் போவது இடையாதென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மாநில சுயாட்சி என்பது ஒரு சாத்தியமற்ற தீர்வு என்பது ஒரு புற மிருக்க, அந்தத் தீர்வுகூட புரட்சியையும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலையையும் திசை திருப்பவும், முடியுமானல் குழி தோண்டிப் புதைக்கவும் எண்ணம் கொண்டுள்ள பிற்போக்கு சக்திகளின் கோஷமே என்பது மிகவும் முக்கியமானது.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலையானது, ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து முற்ருக விடுவித்துக் கொள்ளும் விடுதலையே புதிய ஜனநாயக அரசை உருவாக்குவதன் மூலமே சோசலித்தை நோக்கி முன்னேறவும் உலக சோசலிசப் புரட்சிக்கான ஒரு அங்கமாக, எமது தேசிய விடுதலையை சாதிக்கவும் முடியும். மாநில சபையோ மற்றெந்த சமரச முயற்சிகளோ மக்களை ஏமாற்றும் வெற்று வேட்டுக்களேயாகும்.

கொழும்பிலுள்ள புத்தி ஜீவிகளுக்கும் கட்டுரையாளர்களுக்கும் இதர அரசியல் வாதிகளுக்கும் நாம் சொல்வதெல்லாம் ஒன்றுதான்: சாத்தியமற்ற தீர்வுகளை கூறி உங்களையும் மக்களையும் ஏமாற்ற முயலவேண்டாம். தமிழீழவிடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கவும், அதற்காக சிங்கள வெகுசனங்களிடையே பிரச்சாரத்தை மேற் கொள்ளவும், இந்த பிற்போக்கு அரசை தூக்கியெறிய அவர்களை அணிதிரட்டவும் உங்கள் கட்டுரைகளையும், கருத்துக்களையும் பயன்படுத்துங்கள்; சிங்கள உழைக்கும் மக்களை அவர்களின் அரசியலதிகாரத்தை வென்றெடுப்பதற்காக அணிதிரட்டுங்கள். தமிழீழத்தின் விடுதலைக்கு முன் அது சாத்தியப்பட்டால் மட்டுமே, தமிழ்ழப் போராட்டம் வேறுவடிவம் பெறும் வாய்ப்பு உருவாக முடியும்! இந்த அரசின் கீழ் தமிழீழம்தவிர்ந்த தீர்வுகளுக்கு வாயப்புகளே கிடையாது! ●

---

அன்றைய கவிஞர்
அழகியல் பாடினர்
பனிப்படலங்கள், பட்டுப்பூக்கள்
பால்நிலா. பாடிவரும் பூந்தென்றல்

பொழியும் மழைத்துளிகள்
பச்சை வண்ண மலைத்தொடர்கள்
பாயும் ஆறுகள்—அவர்களின்
பாடல்கள்
இவைகளைத் தொட்டன.

ஆனல்
இரும்பும் எஃகுமே
இன்றைய நிலையில் —நமது
கருப் பொருள்கள்
கவிஞனின் பணி
கவிதை மட்டுமா?
ஒரு போராட்டத்தை
தலைமை ஏற்று
நடத்தவும் வேண்டும்.

—ஹோசி-மின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

o கேளுங்கள், என் குழுமக்களே
நான் அழுகின்றேன்.

o தன் தலையை இழந்துவிட்ட
என் கணவனுக்காக
நான் அழுகின்றேன்.

o அவன் புத்தகங்களின் கர்ட்டில்
தன் தலையை இழந்து விட்டான்.

o என்னுடன் காதல் மொழி பேசிய போது
அவன் விழிகள்
உயிருடனேயே இருந்தன.
அவன் சொற்கள் அடைபடாமல் இருந்தன.
அவன் ஓர் அறிவிலியாக
மாறுதிருந்த வரையில்
ஒரு மனிதனுகவே இருந்தான்.

o என்கணவனின் மேசை மீதுள்ள
காகிதங்கள்
அச்சமூட்டும் படி சுருண்டு
படமெடுத்து உள்ளன.
அவை,

# ●● புத்தகங்களின் காடு

o மற்றமரங்களை எல்லாம் கசக்கி
சாகடிக்கும் 'கிட்டுபா' மரத்தைப்போல
உள்ளன.
சில எழுந்து நிற்கின்றன.
சில மல்லாந்து படுத்துள்ளன.
'ஒரக்' நடனம் ஆடும் இளைஞர்களின்
கால்களைப் போல அவை
பின்னிப் பிணைந்துள்ளன.

o என் கணவனின் வீடு
புத்தகங்களின் காடு.

o இருண்ட, ஈரமான பெரிய காடு.
பூமியில் இருந்து எழுகின்ற
அடர்ந்த நச்சுப்புகை
இலைகளில் சேர்ந்து அரிக்கும்
பனித்துளிகளிலும் மழைத்துளிகளிலும்
சென்று கலக்கும் காடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O ஓ! என்குழு மக்களே,
நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து
அழுவோம், வாருங்கள்.
என் கணவனின்
—ஒரு இளவரசனின்—
மரணத்துக்காக
துக்கம் கொண்டாடுவோம்—
வாருங்கள்.

O நமது வாழிடம் இறந்து விட்டது.
அரியணைக்கான இளவரசன்
உயிர் துறந்து விட்டான்
எனவே வாயில்களை
முட்களால் மூடி விடுங்கள்.
எல்லா இளைஞர்களும் காட்டில்
சிக்கி இறந்து விட்டனர்.

O ஒரு காலத்தில்
நிலா இல்லாத இரவில்
ஒரு காட்டுத்தீயைப்போல எரிந்த
நமது நாட்டின் புகழ்
இன்றைக்கு
செத்துக் கொண்டிருக்கும் கிழவனின்
கடைசி மூச்சாகி விட்டது.

O நமது நாட்டின்
உண்மையான மகன் எவனும் தப்பவில்லை.

யாரேனும் ஒருவன்
ஒருவேளை உயிரோடு தப்பி இருக்கலாமோ?
கதிரவன் மறைவதற்காக எதிர்பார்த்து
புதர்களில் மறைந்து காத்திருக்கலாம்.
அவன் நாளை விடியலுக்குள் திரும்புவானா?

O பித்தநீர்
என் குடலை அரிக்கிறது
நான் வாந்தி எடுப்பது போல உணர்கிறேன்.

O ஏனெனில்
நமது எல்லா இளைஞர்களும்
காட்டில் இறந்து விட்டனர்.

O வகுப்பறைகளில்
அவர்களது ஆண்மை
சாகடிக்கப்பட்டுவிட்டது.

O அவர்களது
விதைக் கொட்டைகள்
கனமான புத்தகங்களால்
நசுக்கப்பட்டு விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் பழுத்தால் வௌவால் தானாகவே வரும்!

இவ் வசனம் எமது மக்களுக்கு பரிச்சயமான வசனம். 1977 தேர்தல் காலங்களில் கூட்டணியின் பிரச்சாரப்பீரங்கி "வௌவால் புகழ்" வண்ணை ஆனந்தனால் மேடைக்கு மேடை இவ்வசனம் முழங்கப்பட்டது. வண்ணை ஆனந்தன் குறிப்பிட்ட வௌவால் எந்த வௌவாலோ தெரியாது. ஆனால் இன்று பல வௌவால்கள் மரம் நாடி வருகின்றன.

அண்மைக்காலங்களில் வெளிநாடுகளிலிருந்து பல பிரமுகர்கள் தமிழ் நாட்டிற்கு படையெடுத்த வண்ணம் இருக்கின்றார்கள். இப்பிரமுகர்கள் நீண்ட நாட்களிற்கு முன்பே வெளிநாடுகளில் போய் குடியேறிய இலங்கைத் தமிழர்கள். இவர்கள் சில இயக்கங்களுக்கு நிதியுதவி செய்பவர்கள். ஏதாவது வீரசாகச நடவடிக்கைகளை எதிர்பார்த்து வாழ்பவர்கள். எதாவதொரு இயக்கம் தாக்குதலைத் தொடுத்து சிங்கள ஆயுதப் படையினரைக் கொன்றால் உடனே தாராளமனதுடன் நன்கொடை வழங்குவார்கள். இன்னொரு இயக்கம் பின் தாக்குதல் செய்தால் அதற்கும் நிதியுதவி என்றவகையில் பணஉதவி செய்வார்கள். இவர்கள்; சலிப்படையாது இருக்க இயக்கங்கள் ஏதாவது செய்யாவிடின் "என்ன பெடியன்கள் ஒன்றையும் செய்யக்காணோம்" என்று அதிருப்தியை வெளிப்படுத்துவார்கள். இவர்கள் மக்கள் அழிவைப்பற்றி அதிகம் அக்கறைப்படுவது கிடையாது. எப்படியான தமிழீழம் என்பதிலும் அக்கறை கிடையாது. எந்தப் 'பிசாசாகிலும்' வந்து தமிழீழம் பெற்றுவிட்டால் போதும் என்று எண்ணுபவர்கள். பலர் இன்னொரு 'இஸ்ரேலை' உருவாக்குவது பற்றி கனவு காண்பவர்கள்.

பல இயக்கங்கள் உருவாவதற்கான சமூக, வரலாற்று, அரசியல் பின்னணிகளை யோசிக்காமல் வெறுமனே, ஏன் பல இயக்கங்கள் என்று வினா எழுப்புபவர்கள சிலர். இன்னும் சிலர் 'சுடுபட்டு இறுதியில் ஒன்று மிஞ்சும்' என்று கூடச்சொல்வார்கள். இவர்களுக்கு ஆங்கிலப்படங்களைப் பார்த்து ஜேம்ஸ் பொண்ட் பாணி நடவடிக்கைகளில் பிரியம். அந்த விருப்பிலேயே இயக்கங்கள் சுடுபடுவதையும் பார்க்கிறார்கள். தாம் தான் இயக்கங்களிற்கு ஆலோசனை வழங்க அவதரித்த 'அவதாரபுருஷர்'களாக நினைப்பவர்கள். இவர்களிற் சிலர் பல லட்சம் ரூபா செலவழித்தே அமெரிக்காவில் மாநாடுகள் வைத்தார்கள். இம் மாநாட்டையிட்டு பலர் கற்பனை செய்ததை விட மாநாடு ஆக்கபூர்வமாக எதனையும் சாதிக்கவில்லை. இன்றைய ஜே. ஆரின் பாஸிச அரசிற்கு உறுதுணையாக இருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் இவர்களிற்கு எதுவித தடையுமின்றி தமிழீழ மாநாடு வைக்கவும், தமிழீழப் பிரகடனம் செய்யவும் அனுமதிக்கிற தென்றால் இவர்கள் யாரென்ற சந்தேகம் எழாமல் இருக்கமுடியாது. பலர் பணத்தைக் காட்டி இயக்கங்களை வாங்க முயற்சிக்கிறார்கள். உண்மையான தேசபக்தியுள்ள மக்கள் நலன் பேணும் இயக்கங்கள் இது போன்ற பிற்போக்கு சக்திகளை அடையாளம் கண்டு அம்பலப் படுத்தி நிராகரிக்க வேண்டும்.

**வெளிநாடுகளில் உள்ள உண்மையான தேசபக்தியுள்ள தமிழர்களை நாம் இனங் கண்டு,** தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தம்மாலான பங்களிப்பை நல்கும்வண்ணம் செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்தான்கள் வேதம் ஓதுகின்றன !

*நாங்கள் அழுவதற்கு வரவில்லை*
*அவர்களைப் புதைத்த இடத்தில்—இன்னும் உயிரோடு இருப்பவர்களே!*
*நாங்கள் வேண்டுவது இதுதான்.........*
*இறந்து கிடக்கும் இளைஞர்கள்—பேரால் கேட்கிறோம்.........*
*தமிழீழ மண்மீது இந்த இளைஞர்களின்*
*சிவப்பு இரத்தத்தை சிந்த வைத்தவர்களை புறக்கணியுங்கள்!*
*யாருடைய ஆணையின் பேரில்—இந்த*
*அக்கிரமம் நடந்ததோ—அந்த*
*கொடியவர்களுக்கு தண்டனை அளியுங்கள்!*
*இந்த சவங்களின் மேல் அரசியல் நடத்தும்*
*அந்தத் துரோகிகளைப் புறக்கணியுங்கள்!*
*இந்தக் கொடுமைகளை மன்னிக்கச்*
*சொல்பவர்களையும் புறக்கணியுங்கள்!*

அண்மையில் சுழிபுரம் பகுதியில் சி. சிவகுமாரன், சிவானந்தன், சி. சிவராசா, த . புவீந்திரன், வி. தேவநாதன், க. யோகீஸ்வரன் எனும் ஆறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வீரர்களும் வேறும் டையாளம் தெரியாத இரு இளைஞர்களுமாக மொத்தம் எட்டு (8) இளைஞர்கள் சிங்கள இனவெறி அரசு செய்யும் சித்திரவதைகளையும் மிஞ்சும் விதத்தில் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்து புதைக்கப் பட்டனர்.

இக் கொலைகளை யார் செய்தார்கள் என்பது தொடர்பாக இரு இயக்கங்கள் ஒருவரை ஒருவர் தாக்கி பிரசுரங்களை விட்டனவேயன்றி, இக் கொலைகளுக்கான உண்மையான காரணம் இன்னும் கண்டுபிடிக்கப் படவேயில்லை. எதிரிக் கெதிராக திருப்பப்படவேண்டிய துப்பாக்கிகள்,விடுதலைப் போராளிகளுக்கு எதிராக திருப்பப்பட்ட எமது வரலாற்றில், ஆரம்பத்தில்சிலகொலைகள் உரிமை கோரப்பட்டும் பின் தவறான இனங்காணல் எனவும், செய்யப்படும் கொலைகள் உரிமை கோரப்படாமலும், இன்று நிகழும் கொலைகள் திரைமறைவில் நடாத்தப்பட்டு மறைக்குமளவுக்கு வளர்ந்து சென்றுள்ளது.

இது போன்ற விடுதலைப் போராளிகளை அழிக்கும் நடவடிக்கைகள் தொடருமாயின் எமது விடுதலைப் போராட்டம் பாரிய பின்னடைவைச் சந்திப்பதுடன் மக்கள் பாரிய அழிவை எதிர் நோக்கும் நிலை ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

இவ் இளைஞர்களுடைய கொலைக்கு இயக்கங்களுக்கிடையேயான பழிவாங்கும் நடவடிக்கையே காரணம் என்பது வெட்ட வெளிச்சம், அதைவிட்டு வேறு காரணங்களை வேண்டுமென்று கண்டுபிடிக்கமுயலுகிறார்கள். இதற்கு இயக்கங்களினுடைய வெளியீடுகளே உதாரணமாகும்.தமிழீழ மக்கள் விடுதலைக்கழ

| | |
|---|---|
| 'மக்கள் விடுதலையா?<br>மனித வேட்டையா ?'<br>**தமிழீழ விடுதலைப் புலிகள்** | 'சுழிபுரம் இளைஞர்கள் கொலை<br>ஒரு திட்டமிட்டசதி!'<br>**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் வெளியிட்டுள்ள 'சுழிபுரம் இளைஞர்கள் கொலை ஒரு திட்டமிடப்பட்ட சதி' எனும் பிரசுரத்தில்,

அண்மையில் கழகச் செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் அவர்களை தளப்பிரதேச வேலைகள் காரணமாக இங்கு வந்திருந்த போது அவரது பாதுகாப்புக்கருதி அவர் இருந்த பிரதேசத்தை சுற்றி சில மைல்கள் தூரத்துக்கு கண்காணிப்பு பலப்படுத்தப் பட்டிருந்தது. இந்த நடவடிக்கைகளைகண்டு நாம் ஒரு பெரிய நடவடிக்கைக்கு தயாராய் உள்ளதாயும், அதனையிட்டு முக்கிய தோழர்கள் வந்திருக்கலாம் எனவும் நம்பி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் மூன்றுதடவைகள் மூன்று குழுக்களாக ஆயுதம் சகிதமாக, காவலுக்கு நின்றவர்களை விரட்டிவிட்டு ஊடுருவிச் சென்றுள்ளார்கள். இச்செய்தி கேட்டு எமது தோழர்கள் இவ்வாறு ஊடுருவியவர்களை சுற்றி வளைத்தார்கள்.

மேற் குறிப்பிட்ட பந்தியிலிருந்து விடுதலை இயக்கங்கள் விடுதலையிலுள்ள அக்கறையைவிட, 'ஒருவரைஒருவர் கடித்துக்குதறஅக்கறையாக இருக்கிறார்கள்' என்பது புலனாகிறது.

இதே பிரசுரத்தில் இவ் இளைஞர்களின் கொலைக்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாமென்றும், அரச கூலிப்படைகளின் சதியாக இருக்கலாமென்றும்கூறிஎதையும்திட்டவட்டமாகக்கூறாது சுலபமாகதப்பித்துக்கொள்கிறார்கள். தங்கள் மீது சுமத்தப்பட்ட கொலைக் குற்றச்சாட்டை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தகுந்த காரணங்களைக் கூறி மறுத்துரைக்கவில்லை.

எப்படி இருப்பினும் விடுதலை இயக்கங்களும், விடுதலையை விரும்பும் பொது மக்களும் இக் கொலையின் பின்னணியிலுள்ள சூத்திரதாரிகளைக் கண்டு பிடித்து அம்பலப் படுத்த வேண்டியது அவசியம்.

ஒவ்வோர் இனக்கலவரத்தின் போதும் அப்பாவித் தமிழ் மக்கள் வதை செய்யப்பட்டு கொல்லப்படும் போதும், 83 யூலைக் கலவரத்தின்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் விடுதலைப் போராளிகள் படுகொலை செய்யப்பட்ட போதும் அனைத்து சிங்கள மக்களையும் காட்டு மிராண்டிகள், பிணந்தின்னிகள், கசாப்புக் கடைக்காரர்கள் என ஒப்பாரி வைத்த தலைவர்கள் இன்று சித்திரவதை மூலம் படுகொலை செய்யப்படும் போராளிகளின் கொலைகளைப் பார்த்து மௌனமாக இருப்பது ஏன்?

மேலும் இன்னுமொரு விடுதலை இயக்கமான 'தமிழீழ விடுதலை இராணுவத்தில்' நடைபெற்ற சம்பவங்கள் மிகவும் வேதனைக் குரியவை, அவர்களுடைய வெளியீடான 'களையெடுப்பு' எனும் பிரசுரத்தில் ''பதவிக்காகக் காட்டிக் கொடுப்பு'' நடை பெற்றதாகக் கூறுகிறார்கள். விடுதலைப் போராளிகளான கூச், சேகர் எனும் இருவர் கொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. சரியான அரசியல் சித்தாந்த அடிப்படையில் கட்டப்படாத இயக்கங்களுக்குள், ஒருவர் மீதொருவர் தேவையற்ற சந்தேகங்கள், கோஷ்டி மனோ பாவம், சதிகள், திரை மறைவு நடவடிக்கைகள், கொலைகள் என்பது நிகழ்வது தவிர்க்க முடியாததாகும்.

இன்று இயக்கங்களுக்குள்ளே இது போன்ற நடவடிக்கைகள் வெளியே தெரியாமல் நிகழ்கின்றன. அவற்றிற்குள் இருக்கும் விடுதலைப் போராளிகள் பயம் காரணமாக இவற்றை வெளியே சொல்ல முடியாதவர்களாகவும், இந் நடவடிக்கைகளுக் கெதிராக இயக்கங்களுக்குள்ளேயே போராட முடியாதவர்களாகவும் உள்ளனர்.

இந்நிலையை மாற்ற அனைத்து விடுதலை விரும்பிகளும், தம்மாலான முயற்சிகளை எடுத்து விடுதலை இயக்கங்களால் விடுதலைப் போராளிகளுக் கெதிராகதிருப்பப்பட்டுள்ள துப்பாக்கிகளை எதிரிக்கெதிராக ஐக்கியப் பட்டு திரும்ப வைக்கவேண்டும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கியத்தின் அவசியம் பற்றி

சுமார் 10 வருடங்களைத் தாண்டிவிட்ட தமிழீழ விடுதலைப் போராட்டமானது, பல் வேறு மாற்றங்களுக்குட்பட்டு இன்று, நெருக்கடியான கட்டத்திலுள்ளது. 1970ல் தனிநாடு எனும் கோஷம் தமிழ் இளைஞர்களால் முன் வைக்கப் பட்டாலும் 1975 இற்குப் பின்பே ஆயுதப் போராட்டம் எனும் கட்டத்திற்குச் சென்று படிப்படியாக வளர்ச்சி பெற்றது. 1977 தேர்தலைத் தொடர்ந்து ஏற்பட்ட இனக் கலவரத்தின் பின் ஆயுதப் போராட்டம் தவிர்ந்த ஏனைய வழிமுறைகள் பெருமளவில் நிராகரிக்கப் பட்டு ஆயுத மேந்திய நடவடிக்கைகளை இயக்கங்கள் மேற்கொள்ளும் நிலை யேற்பட்டது. பின்னர் 1979ல் ஏற்பட்ட அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்து 1980 களில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டு மீண்டும் 1981 இலிருந்து ஆயுதமேந்திய நடவடிக்கைகள் வளர்ச்சி பெற்று 1983இல் ஓர் திடீர் பாய்ச்சல் ஏற்பட்டது. 1983யூலைக் கலவரத்தைத் தொடர்ந்து போராட்டத்தின் தன்மையில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. எமது போராட்டம் முழுக்க, முழுக்க சர்வதேச அரசியலின் ஓர் அங்கமாக மாறியதுடன் வல்லரசுகளின் கவனத்தையும் ஈர்த்தது. உலகில் நடக்கும் எந்தவொரு பிரச்சினையையும் இன்று சர்வதேச அரசியலிலிருந்து பிரித்துப் பார்க்கமுடியாது. இதனால்எமதுபிரச்சினையும் சர்வதேச அரங்கில் முக்கிய இடத்தைப் பெற்றது.

மக்கள் முழுமையாக அரசியல் மயப்படுத்தாமையும் அமைப்பு வடிவில் அணிதிரட்டப் படாமையும் திடீரென ஏற்பட்ட நெருக்கடிக்கு முகம் கொடுக்க முடியாத நிலையைத் தோற்றுவித்ததுடன் தமது நடவடிக்கைகளை இந்தியாவிற்கு நகர்த்த வேண்டிய நிலைக்கு இயக்கங்களைத் தள்ளியது. இதே நிலையில் இயக்கங்களின் அளவில் துரித வளர்ச்சி ஏற்பட்டாலும் உண்மையான வளர்ச்சி ஏற்படவில்லை. இயக்கங்களின் ஸ்தாபன வடிவம், நிர்வாகத்திறன் என்பன இவ்வீக்கத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் ஆட்டம் கண்டதனால் ஒழுங்கற்ற அமைப்பு வடிவிலேயே இயக்கங்கள் தமது செயற்பாடுகளை மேற்கொண்டன. அமைப்புகளிற்குள் அராஜகம் தலைவிரித்தாடியது. அமைப்புக்கள் சில தனிநபர்களை மையமாக வைத்துக் கட்டப்பட்டது மாத்திரமல்லாமல் அவர்களைக் காட்டியே அமைப்புக் கட்டப்பட்டது. இத் தனிநபர் வழிபாடானது அத்தனி நபர்கள் தமது கைகளில் பெருமளவு அதிகாரங்களை எடுக்க ஏதுவாயிற்று. இத்தலைவர்கள் சர்வ அதிகாரமும் கொண்ட சர்வாதிகாரிகளாக மாறினர். இயக்கத்திற்குள் ஜனநாயகம் மறுக்கப்பட்டு உட் பூசல்கள் ஏற்படும் பொழுது அவை பலாத்காரமாக நசுக்கப்பட்டன. கருத்து வேறுபாடு காரணமாக யாராவது இயக்கத்தை விட்டு வெளியேற முனைந்தால் துப்பாக்கிகள் அவர்களை நோக்கித் திருப்பப் படுகின்றன. இயக்கங்களின் உள் முரண்பாடுகள் மாத்திரமல்ல இயக்கங்களிடையேயான கருத்தியல் பிரச்சினைகள்கூட இவ்வழிகளிலேயே இயக்கங்கள் கையாள முனைகின்றன. இவற்றின் விளைவாக இன்று சதி, கோஷ்டிவாதம், கழுத்தறுப்பு, பொய்யும் புரட்டும், அவதூறு, திரைமறைவிலான படுகொலைகள் என்னும் நிலை, என்ற கட்டத்திற்கு எமது விடுதலைப் போராட்டம் தத்தளிக்கின்றது

மேற்கூறிய நிலைகளிற்கான அடிப்படைக் காரணம் மக்கள் என்றுமே பார்வையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக வைக்கப்பட்டதுதான் என்பதை பல முறை சுட்டிக் காட்டியுள்ளோம். மக்கள் கடந்த35வருடங்களாகஇரட்சகரைநம்பி என்றுமே தாம் போராடாது தமக்கு விடுதலையை யாராவது கொண்டுவந்து கையில் வைப்பார்கள் என்று எதிர்பார்த்தே வந்துள்ளார்கள்; அப்படி எதிர்பார்க்க வைக்கப்பட்டார்கள்.

1983 யூலைக் கலவரத்தின்பின் மக்களுக்கு இயக்கங்களினால் தமிழீழம் கிடைப்பதற்கான மாதம், திகதி என்பன கொடுக்கப் பட்டன. மக்கள் விரைவில் தீர்வை எதிர்பார்ப்பது இயல்பானது. காலம் நாட்களாக, மாதங்களாக, வருடங்களாக உருண்டோடியது. இயக்கங்களின் நடவடிக்கைகள் மேலும் மேலும்ஒடுக்குமுறையை அதிகரிக்க செய்தனவேயன்றி வேறெதையும் செய்து விடவில்லை. மக்கள் அழிவை தமதாக்கிக் கொண்டனர் அண்மையில் கூட ஒருகுறிப்பிட்ட இயக்கத்தினரால் பொங்கல் நாளிற்கு முன்பாக தமிழீழம் கிடைத்து விடும் என நம்பிக்கையூட்டப் பட்டது. மக்கள் எத்தனை நாட்களிற்கு இது போன்ற வார்த்தைகளை நம்பமுடியும். தைப் பொங்கல், தீபாவளி, வருடப்பிறப்பு என எத்தனை காலம் நம்பிக்கையுடன் காலத்தைத் தள்ளுவது. என்றுமேஇரட்சகரின்மேல்நம்பிக்கையூட்டுவதையே தமிழ் மக்களைத் தலைமை தாங்கியவர்கள் செய்து வந்தார்கள். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த காலத்தில் எமது தனிப் பெரும் தலைவர் ஜீ.ஜீ தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளுக்காகப் போராடாது, மகாராணியின் பிரதிநிதி 10 வருடத்திற்கொருமுறை வந்து ஆட்சி சரிவர நடக்கிறதா எனக் கண்காணித்துச் செல்ல வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். பின்னர் தந்தை செல்வா கூட மகாராணிக்குத் தந்தியடித்த வரலாறுகளுண்டு. அதன் தொடர்ச்சிதான் இன்னமும் இரட்சகர்களின் வரவை எதிர்பார்ப்பதற்கு வைக்கின்றது. மக்கள் என்ன செய்வார்கள். இந்த இயக்கங்களின் நடவடிக்கைகள் நம்பிக்கை தருவனவாய் இல்லாத பட்சத்தில் இரட்சகரை எதிர்பார்ப்பது இயல்பானதே. மக்கள் தமது சக்தியை உணரவில்லை; தமது பலத்தின்மீது நம்பிக்கையிழந்தனர், இதன் விளைவு பெருமளவில் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கினர். வசதிக் கேற்ப சட்டபூர்வமாகவும், சட்ட விரோதமாகவும் படகுகளில் தமிழ் நாட்டிற்கு சென்றவண்ணம் இருக்கின்றனர். இதே நிலைமையை இப்படியே தொடர விடுவதா அல்லது தடுத்து நிறுத்துவதா என்பதை இயக்கங்கள் முடிவு செய்ய வேண்டிய நிலையுண்டு. மக்கள் தமது சக்திமீது நம்பிக்கை வைத்திருப்பார்களேயானால் இப்படி நடக்க முடியாது. இயக்கங்களும் மக்களுக்கு அதனைச் செய்யவுமில்லை.

மக்கள் இயக்கங்கள்மீது நம்பிக்கை கொள்வதாயின் அவை பொது உடன்பாட்டில் ஐக்கியப்படுவது மிக மிக அத்தியாவசியமானது. இதற்கு முன்பாக இயக்கங்கள் எதிரிகள் யார், நண்பர்கள் யார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சக போராளிகளுக்கு எதிராகத் திருப்பப்படும் துப்பாக்கிகளை எதிரிக்கெதிராகத் திருப்ப வேண்டும். இயக்கத்திற்குள் ஒருவரையொருவர் போராளிகளாக அங்கீகரிக்க வேண்டும். ஒரு இயக்கத்தை மற்றைய இயக்கம் விடுதலை இயக்கமாக அங்கீகரிக்க வேண்டும். தத்தமது குழு நலனை மறந்து மக்கள் நலனடிப்படையில் ஒருவருடன் ஒருவர் மனம் விட்டுப் பேச வேண்டும். தமது கருத்துக்களை ஒழிவு மறைவின்றி முன் வைக்க வேண்டும். இதன் மூலம் மட்டுமே சகல தேச பக்த ஜனநாயக சக்திகளும் ஒரு பொது உடன்பாட்டில் ஐக்கியப் பட முடியும். இதுவே காலத்தின் தேவையும் மக்களின் விருப்பமும் கூட. இப்படி ஐக்கியப் பட்டு மக்கள் மத்தியிலிருந்து போராடுவதன் மூலம் மட்டுமே மக்களைப் பாதுகாக்க முடியும் நாம் முதலில் போராடவேண்டும்.நாம்போராடாது எமக்கு யாராவது உதவுவார்கள் என்றோ எமக்காகப் போராடுவார்கள் என்றோ எதிர்பார்ப்பது வெட்கக்கேடானதும் தவறானதுமாகும். இந்நிலையை உணர்ந்து மக்கள் நலன் அடிப்படையில் தற்காப்பு யுத்தத்தை முன்னெடுக்க சகல ஜனநாயக சக்திகளையும் முன்வருமாறு அறைகூவி அழைக்கிறோம். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட ரீதியான நடவடிக்கையும் சட்ட விரோத நடவடிக்கையும்

கட்சியானது போராட்ட நிலைமைகளில் ஏற்படக்கூடிய அனைத்து மாற்றங்களுக்கும் ஏற்பவிரைவாகதன்னை தகவமைத்துக் கொள்ளுவதற்குத் தயாரான விதத்தில் அமைக்கப் படவேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் குவிக்கப்பட்டுள்ளஎதிரியின், பெருமளவிலான சத்திகளுக்கெதிராக பகிரங்கமான போரைத் தவிர்க்கக் கூடியதும் அதே சமயம் எதிரியின் குவிப்பையே சாதகமாக்கிக் கொண்டு அவன் துளியும் எதிர்பாராத இடத்தில் தாக்கக்கூடியதுமான ஒரு போர்க் குணமிக்க அமைப்பாக கம்யூனிஸ்ட் கட்சியானது வளர வேண்டும். ஒரு கலகத்தையோ, தெருச் சண்டையையோ மட்டும் நம்பியிருப்பது அல்லது கடுமையான அடக்குமுறை நிலைமைகளை மட்டும் நம்பியிருப்பது பெருந் தவறாகும். கம்யூனிஸ்ட்டுகள் ஒவ்வொரு நிலைமைக்கும் ஏற்பத் தயாராக தமது பூர்வாங்க புரட்சி வேலையை செய்கிறார்கள். ஏனெனில் கொந்தளிப்பு, அமைதி என்று மாறிமாறி வருகின்ற காலங்களை முன் கூட்டியே கணிப்பது கிட்டத்தட்ட சாத்தியமல்ல. அவ்வாறு கணிக்க முடிந்தாலும் கூட அந்தக் கணிப்பை ஆதாரமாகக் கொண்டு மாற்றியமைத்துக் கொள்வது இயலாதது. காரணம் மாற்றமானது விரைவாகவும், அடிக்கடியும் திடீரென்றும் ஏற்படுகிறது.

முதலாளித்துவ நாட்டு கம்யூனிஸ்டு கட்சிகள் ஆயுதப் போராட்டத்திற்கு அல்லது பொதுவாக சட்டவிரோத வேலைக்கு தயாராக இருப்பதென்ற கட்சி முன்னுள்ள பணியின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள வழக்கமாகத் தவறிவிடுகிறார்கள் தமது நிலை நிற்புக்கு நிரந்தரமாக சட்டரீதியான அடிப்படையை சார்ந்து நிற்றல், சட்டரீதியான பணியின் தேவைகளுக்கேற்பவே தமது வேலைகளை நடத்தி வருதல் என்ற தவற்றை கம்யூனிஸ்டு அமைப்புகள் அடிக்கடி செய்து விடுகின்றன.

மறுபுறம், சட்டவிரோத கட்சிகள் புரட்சிகர வெகு ஜனங்களுடன் இடையறாத தொடர்பு கொண்டிருக்கக் கூடிய ஒரு கட்சி அமைப்பை கட்டுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகளிலுள்ள சாத்தியக் கூறுகள் அனைத்தையும் பயன் படுத்திக் கொள்ள அடிக்கடி தவறிவிடுகின்றன. இந்த முக்கியமான உண்மைகளை புறக்கணிக்கின்ற தலைமறைவு அமைப்புக்கள் வெறுமனே தமது சக்தியை வீண் முயற்சிகளில் ஈடுபடுத்துகின்ற சதியாளர் குழுக்களாக மாறிவிடக் கூடிய ஆபத்துள்ளது.

இவ்விரு போக்குகளுமே தவறாகும். ஒவ்வொரு சட்டபூர்வமான கம்யூனிஸ்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பும் ஒரு தலைமறைவு நிலைநிற்பிற்கும், அதற்கு மேல் புரட்சிகர எழுச்சிகளுக்கும் வேண்டிய முழுத் தயார் நிலையை தனக்கு எவ்வாறு உத்தரவாதம் செய்து கொள்வது என்பதை அறிந்திருக்க வேண்டும். மறுபுறம், ஒவ்வொரு சட்டவிரோதமான கம்யூனிஸ்டு அமைப்பும் தீவிரமான கட்சி செயற்பாடு களின் மூலம் மகத்தான புரட்சிகர மக்களது அமைப்பு ரீதியான உண்மையான தலைவனு வதற்கு சட்டரீதியான தொழிலாளர் இயக் கங்கள் ஏற்படுத்தித் தருகின்ற சாத்தியக் கூறுகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சட்டவிரோதமான கம்யூனிஸ்டு அமைப்பு நடவடிக்கைகள் தாமே ஒரு நிறுவனமாக ஆகிவிடுதல், பிறகட்சி அமைப் புகள் மற்றும் நடவடிக்கைகளிலிருந்து தனித்த முழுக்க முழுக்க இராணுவ ரீதியான தொரு அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளல் ஆகிய போக்குகள் சட்டரீதியான கட்சி கூட்டங்கள்,தலைமறைவு கட்சி வட்டாரங்கள் ஆகிய இரண்டிலுமே காணப்படுகின்றன. இது அடியோடுதவறுனது. மாறுக புரட்சிக்கு முந்திய கட்டத்தில் நமது போர்க் குணமிக்க அமைப்புகளை அமைக்கும் பணியானது, கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுவான வேலை யின் மூலமாகவே நிறைவேற்றப்படவேண்டும் கட்சி முழுமையுமே புரட்சிக்கான ஒரு போர் க்குணமிக்க அமைப்பாக வளர்க்கப்பட வேண்டும்.

புரட்சிக்கு முந்திய காலத்தின் போது பக்குவமற்ற விதத்தில் உருவாக்கப்படுகின்ற தனிமைப்பட்ட புரட்சிகர இராணுவ அமைப் புகள் நேரடியான பயனுள்ள கட்சிவேலை யில்லாததால் கலைந்து விடுகின்ற போக்கைக் காணலாம்.

அதே சமயம் ஒரு சட்டவிரோதக் கட்சி தனது உறுப்பினர்களையும் கட்சி உறுப்புக் களையும் அதிகாரத்திலுள்ளோர் அறிந்து கொள்ளாமல் பாதுகாப்பது அவசியமே. பதிவேடுகள் வைத்திருத்தல், அன்பளிப்புகளை கவனக்குறைவாக வசூலித்தல், புரட்சிகர ஆவணங்களை யோசனையின்றி விநியோ கித்தல் ஆகிய வழிகளில் அதிகாரத்திலுள் ளோர் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளை தவிர்த்தல் அவசியம். இக் காரணங்களினுல் அது ஒரு சட்டரீதியான கட்சி அளவுக்கு வெளிப்படையான அமைப்பு முறைகளைக் கையாள முடியாது. இருப்பினும் அது இவ் விடயத்தில் நடைமுறை மூலம் மென்மேலும் திறன் பெற முடியும்,

மாறுக ஒரு சட்டரீதியான வெகுஜனக் கட்சி, சட்டவிரோத வேலைக்கும் போராட்ட காலங்களுக்கும் முழுமையாகத் தயாராக இருக்கவேண்டும். எந்நிலைமைக்குமேற்றதான தயார் நிலையில் தளர்ச்சி இருத்தல் கூடாது. (அதாவது உறுப்பினர்கள் பட்டியலுக்கு நகல் கள் பாதுகாப்பாக மறைத்து வைக்கப்பட்டு பெரும்பாலும் கடிதப் போக்குவரத்துகளை அழித்துவிடுதல், முக்கியமான தஸ்தாவேஜு களை பாதுகாப்பாக வைத்தல், தனது தூதுவர் களுக்கு பயிற்சியளித்தல் போன்றவை)

சட்டவிரோத அமைப்புகள் என் ருல் கட்சிக்குள்ளேயே அலாதியான தனிமையில் வைக்கப்பட்டுள்ள முழுக்க முழுக்க இராணுவ ரீதியான நிறு வனங்கள் போல் இருக்கவேண்டும் என்று சட்டரீதியான கட்சி வட்டாரங்களிலும் சட்டவிரோதமான கட்சி வட்டாரங்களிலும் கூட கருதப்படுகின்றது. இந்தக் கருத்து தவறு னது. புரட்சிக்கு முந்திய காலத்தில் நமது போராட்ட அமைப்புகளை உருவாக்குதல் பொதுவானகட்சிவேலையையேமுதன்மையாக சார்ந்திருக்கவேண்டும். கட்சி முழுவதுமே புரட்சிக்கான ஒரு போரிடும் அமைப்பாக ஆக்கப்படல் வேண்டும்.

எனவே நமது பொதுவான கட்சி வேலை யானது புரட்சிக்கு முந்தியகாலத்தின்போதே புரட்சியின் தேவைகளுக்கு உகந்த விதத்தில் ஒரு போரிடும் அமைப்பை நிறுவி திடப்படுத்துதலை நோக்கி செய்யப்பட வேண்டும். கம்யூனிஸ்டு கட்சியின் தலைமைக் குழு அதன் அனைத்து செயற்பாடுகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிகர தேவைகளினுலேயே வழி நடத்தப் படுவதும் முடிந்த அளவிற்கு அத்தேவைகள் எவையென ஒரு தெளிவான கருத்தை அடையப்பாடுபடுதலும் மிகமிக முக்கியமாகும். இது இயல்பிலேயே எளியபணியல்ல. ஆயினும் அதற்காக கம்யூனிஸ்ட் அமைப்பு ரீதியான தலைமையின் இந்த மிக முக்கியமான அம்சத்தை புறக்கணித்து விடக்கூடாது.

மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள கட்சி கூடவும் பகிரங்க புரட்சிகர எழுச்சிகளின் கட்டத்தில் பெரும் செய்ற்பாட்டு மாற்றங்களுக்கு உட்படுத்திக் கொள்ளும் போதும் மிகவும் கடினமான, சிக்கல் நிறைந்த பணிகளை எதிர் நோக்க வேண்டி இருக்கும் புரட்சிகர போராட்டத்துக்கு அதன் சக்திகளை சில நாட்களில் திரட்டும்படியான அவசியம் கட்சிக்கு ஏற்படலாம். அனேகமாக, கட்சி சக்திகள் தவிர, அதன் சேமிப்பு சக்திகள் அனுதாப அமைப்புகள் அதாவது அமைப்பாக்கப்படாத புரட்சிகர வெகு ஜனங்களையும் கூட திரட்டும்படி நேரிடலாம். ஒரு ஒழுங்கான செஞ்சேனை அமைப்பதுகூட அப்போது முடியா திருக்கலாம். முன் கூட்டியே அமைக்கப்பட்டுள்ள ஒரு இராணுவ மின்றியே கட்சித்தலைமையின் கீழுள்ளவெகுஜனங்களைக் கொண்டே நாம் வெல்ல வேண்டும் எனவே அத்தகைய ஒரு நிகழ்விற்கு நமது கட்சி நன்கு தயாராவும், அமைப்பாகவும் இல்லாவிடில் மிகவும் தீர்மானகரமான முயற்சிகள் கூடவும் வெல்லாது.

பின் குறிப்பு:- இக்கட்டுரை லெனினது வழிகாட்டலில் வரையப்பட்டு 1921ல் கம்யூனிச அகிலத்தின் மூன்ருது மகா நாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு அடிப்படையான தஸ்தாவேஜிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

இதில் கூறப்படும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் அமைப்பு பற்றிய கோட்பாடுகள் அனைத்து நாடுகளுக்கும் பொருந்தக் கூடியவையே. ஆயினும் இதில் கூறப்பட்டுள்ள உதாரணங்கள் ஆயுத எழுச்சியை யுத்த தந்திரமாகக் கொண்ட புரட்சியின் அனுபவத்திலிருந்து எடுத்தாளப் படுகின்ற உதாரணங்களாகும். இக்கட்டுரையில் செஞ்சேனைபற்றி கூறப்பட்டுள்ளது, புரட்சிக்கு முந்திய நிலைமைகள் பற்றி பேசியிருப்பது ஆகியவற்றை இந்த அடிப்படையில் புரிந்து கொள்ளவேண்டும். ●

---

● மக்களுக்கு முழுமனதுடன் தொண்டு செய்வது; ஒரு கணமேனும் பொது மக்களிடமிருந்து நம்மைப் பிரியாமல் வைத்திருப்பது; எதைச் செய்தாலும் மக்களின் நலன்களிலிருந்தன்றி, ஒருவரின் சுயநலத்திலிருந்தோ அல்லது ஒரு சிறு கும்பலின் நலன்களிலிருந்தோ தொடங்காமல் இருப்பது; மக்கள் மீதான தமது பொறுப்பையும் கட்சியின் தலைமை ஸ்தாபனங்கள் மீதான தமது மொறுப்பையும் ஒன்ருகக் கருதுவது—இவையே நமது தொடக்கப்புள்ளியாகும்.

■

● யுத்தத்தில் ஆயுதங்கள் ஒரு முக்கியமான அம்சம்; ஆனுல் தீர்க்கமான அம்சம் அல்ல. தீர்க்கமான அம்சம் மக்கள் அன்றி பொருட்கள் அல்ல. பலப்போட்டி என்பது இராணுவ பலம், பொருளாதார பலம் இவற்றின் போட்டி மாத்திரமல்ல; மனிதபலம், மனவுறுதி இவற்றின் போட்டியுமாகும். இராணுவ, பொருளாதார பலமும் மக்களால்தான் ஓச்சப்படுகின்றது.

-மா. சே-துங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான ஸ்தாபனமின்றேல் போராட்டம் வெற்றி பெருது!

## சிங்கள மாணவர்களின் போராட்டம் சில படிப்பினைகள்

அண்மையில் பல்கலைக் கழக திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனை எதிர்த்து சிங்கள மாணவர்கள் போர்க்கொடி தூக்கினர். ஜே. ஆரின் யு. என். பி அரசு பதவிக்கு வந்தபின் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒவ்வொன்ருகப் பறித்து தனது பாசிச நுகத்தடியில் மக்களை ஒடுக்கி வந்தது. இவைகளை மறைப்பதற்கு பௌத்த சிங்கள இனவாதம் சிறந்த கவசமாகப் பயன்பட்டது.

1980ம் ஆண்டு வேலைநிறுத்தம் செய்த 40,000 தொழிலாளர்களை வீதிக்கு விரட்டிய இதே ஜே. ஆரின் அரசு பின் பல வேலைநிறுத் தங்களில் தனது குண்டர்களை ஏவி தொழிலாளர்களைத் தாக்கியது. அமைதியான பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்களைக்கூட குண்டர்படை கொண்டு தாக்கியது தமிழ்த் தேசிய இனத்தின்மீது தனது காட்டுமிராண்டித்தனமான ஒடுக்குதலை மேற்கொண்டுள்ள இந்தப்பாசிச அரசு தமிழ் இனத்தின் மீது சிங்கள மக்களை ஏவிவிட்டது. அதன் வெளிப்பாடுதான் 1983யூலைக் கலவரம். கேவலம் ஒன்றுமறியாத இளம் பாடசாலை மாணவர்களிடையேயும் தார்மீக பாதுகாவலர்கள் இனவாத விஷவித்துக்களை தூவினர். இது 1983ல் நாலந்தா, ஆனந்தாக் கல்லூரி மாணவர்களையும் இனக்கலவரத்தில் மும்முரமாக ஈடுபட வைத்தது.

கடந்த அரசாங்க காலத்தில் பல்கலைக் கழக மாணவர்களின் போராட்டத்தில் உயிரிழந்த வீரசூரியாவின்பிணத்தைக்காட்டி அரசியல் பிழைப்பு நடத்திய இதே ஜே. ஆர். அரசு இன்று சிங்கள மாணவர்களை காட்டுமிராண்டித்தனமாக ஒடுக்குகிறது. சென்றவருடம் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குள் பொலிஸ் நிலையத்தை உருவாக்க மாணவர்கள் எதிர்ப்புத்தெரிவித்தபோது ஒரு மாணவனை சுட்டுக்கொன்றது இவ்வரசு. இத் திருத்தச் சட்டத்தின் மூலம் அரசு இன்று பல் கலைக்கழகங்களை தனது நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளது. மாணவர்களுக்கு இருக்கும் சில ஜனநாயக உரிமைகளைக்கூட இல்லாதொழிப்பதே கொண்டுவரப்பட்ட திருத்தச்சட்டத்தின் நோக்கமாகும். மாணவர்கள் தமக்கான பிரதிநிதிகளைக்கூட தெரிவு செய்யமுடியாத நிலை; மாணவர்களுக்கான சங்கம் கூடும் உரிமைகூட இல்லை. இந்த ஜனநாயக விரோத சட்டங்களை எதிர்த்து மாணவர்கள் கிளர்ந்தெழுந்து வீதிகளில் இறங்கிப் போராடினுர்கள்; புத்தபிக்குமார் உட்பட ஆயிரக்கணக்கான மாணவர்கள் வீதிகளில் இறங்கினர். தன்னெழுச்சியான இப்போராட்டம் சில நாட்களில் 'இரத்தக் களரியின்' மத்தியில் முறியடிக்கப்பட்டது.

ஏன் இப்போராட்டமும் இதுபோன்ற போராட்டங்களும் மேற்கொண்டு முன்னெடுத்து செல்ல முடியாது போயின, என்பதை உற்று நோக்குதல் அவசியம். சரியான வழிகாட்டலைக் கொடுக்ககூடிய ஸ்தாபனம் இல்லை. மாணவர்கள் தங்களுக்கான ஒரு மாணவர் அமைப்பைக்கூட உருவாக்காத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் அவ்வப்போது முன்னெடுக்கப்படும் தன்னெழுச்சியான போராட்டங்கள் இவ்விதம் தோல்வியைத் தழுவுவது தவிர்க்க முடியாததே.

சிங்கள மாணவர்களும் தொழிலாளர், விவசாயிகள் மற்றும் ஒடுக்கப்படும் மக்கள் அனைவரும் தமிழ் மக்களின் நீதியான போராட்டத்திற்கு ஆதரவு நல்குவதோடு ஒன்றிற்கொன்று உதவும்வகையில் போராட்டத்தை முன்னெடுக்காவிடின் சிங்கள மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை ஒருபோதும் பெற்றுவிடமுடியாது நாம் சிங்கள மாணவர்களதும் மற்றும் ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களதும் நீதியான போராட்டத்தை ஆதரிப்பதோடு எம்மாலான சகல உதவிகளையும் நல்கத் தயாராயுள்ளோம். இன்றைய சூழ்நிலையில் நாம் எமது போராட்டத்தை சிங்கள மக்களின் போராட்டத்திற்கு பரஸ்பரம் உதவும் வகையில் முன்னெடுப்பதன் மூலமே வெற்றிக்குக் கொண்டுபோக முடியும். அதிலும் குறிப்பாக மலையக மக்கள் தமது போராட்டத்தை சிங்கள உழைக்கும் மக்களின் போராட்டத்துககு உதவும் வகையில் முன்னெடுப்பது அவசியமானது.

மேலும் சிங்கள மாணவர்களதோ அன்றி தொழிலாளர் விவசாயிகளதோ போராட்டங்கள் ' தன்னெழுச்சியாக ' மேற்கொள்ளப்பட்டு அரசால் முறியடிக்கப்படாதிருக்க சிங்கள ஒடுக்கப்படும் மக்கள் தங்களை ஒரு ஸ்தாபனமாக்க வேண்டும். இதன் மூலம் மட்டுமே அவர்களும் பிற ஒடுக்கப்படும் மக்களும் தங்களது போராட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும். ●


**Medical Unit for Service of Tamils**

**தமிழர் நல மருத்துவ அமைப்பு**

தமிழர் நல மருத்துவ அமைப்பு எனும் பெயரில் தமிழீழ மக்களுக்கான பொது மருத்துவ அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பானது பல தனி நபர்களினதும் பல்வேறு இயக்கங்களினதும் ஒத்துழைப்புடனும், கூட்டு செயற்பாட்டுடனும் உருவாக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சமூக சேவை அமைப்புகளின் பங்களிப்புகள் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றிக்கு இட்டுச் செல்வதற்கு இன்றியமையாதவை. தமிழர் நல மருத்துவ அமைப்பு பரந்த நோக்கில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் தனது சேவையை செய்வதற்கு அனைவரினதும் உதவியையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் நேருவுக்கு அஞ்சலி!

**நேரு என அழைக்கப்படும் ஜெகதீஸ் எனும் விடுதலைப் போராளி தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் (TELO) படுகொலை செய்யப்பட்டார்.**

தோழர் நேரு, அவரது தோழர்கள், நண்பர்கள் யாபேராலும் நேசிக்கப்பட்டவர். நீதியையும் மனிதாபிமானத்தையும் தமிழீழத்தில் நிலைநிறுத்துவதற்காக போராட்டத்தில் முழுமையாக ஈடுபட்டவர்.

இவர் ஆரம்பத்தில் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியுடன் இணைவதற்கான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார். பின் 1983 யூலைக் கலவரத்தைத் தொடர்ந்து தமிழீழ விடுதலை இயக்கத்தில் சேர்ந்து பயிற்சி பெற்றார். தமிழீழ விடுதலை இயக்கத்துடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையும், அதன் நடவடிக்கைகளிலேற்பட்ட அதிருப்தியும், அமைப்பினுள்ளேயே உட்கட்சிப் போராட்டம் நடாத்த எதுவித வாய்ப்புமின்மையால் தமிழீழ விடுதலை இயக்கத்திலிருந்து அவரை ஒதுங்க வைத்தது.

எமது அமைப்பின் கருத்துக்களுடனும், வேலைத் திட்டத்துடனும் அவர் உடன்பாடு கொண்டிருந்தார். எம்முடன் இணைந்து செயல்படுவது பற்றி பேச்சுவார்த்தையிலீடு பட்டிருந்தார். எமது அமைப்பில் அங்கத்தினராய் இல்லாதபோதும் அவரது உயிர்ப் பாதுகாப்புக்கான கோரிக்கையின் நியாயம் கருதி அவரை எமது பாதுகாப்பான இடத்தில் வைத்திருந்தோம்.

10-10-84 அன்று அவர் இடத்திலிருந்து அவர் வெளியே செல்லும்போது தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு, பின்படுகொலை செய்யப்பட்டதாக எமக்குத் தகவல்கள் கிடைத்தன.

நாம் ஆரம்ப காலம் முதல் இதுபோன்ற கொலைகளைக் கண்டித்து வந்துள்ளோம். விடுதலைப் போராளிக்கெதிராக துப்பாக்கிகள் திருப்பப்பட்ட எமது கறை படிந்த வரலாற்றில் சுந்தரம், இறைகுமாரன், உமைகுமாரன், ஒபரோய் தேவன், மனோமாஸ்டர், ஜெகன் இன்று, நேரு என பட்டியல் நீண்டு செல்கிறது. விடுதலை இயக்கங்களால் திரைமறைவில் நூற்றுக்கணக்கான பேர் கொல்லப்பட்டதாக இந்தியப்பத்திரிகைகளே பகிரங்கமாக எழுதியுள்ளன (The News Week)

இன்று மக்கள் தாங்கொணு துன்பத்திற்கும், நெருக்கடிக்கும் முகம் கொடுக்கும் இந்நேரத்தில் இயக்கங்கள் போராளிகளைக் கொன்றொழிப்பது எமக்கு பாதகமானதும் எதிரிக்கு சாதகமானதுமாகும்.

ஓர் இயக்கத்துக்குள் போராளிகளுக்கு அடிப்படை ஜனநாயக உரிமைகள் இருக்க வேண்டும். போராளிகள் தமது கருத்துக்களை சுதந்திரமாக வைக்கவும் தமது கருத்துக்காகப் போராடவும், கருத்து முரண்பாடு தீர்க்கப்பட முடியாத பட்சத்தில் அவர் அமைப்பைவிட்டு வெளியேறவும், பின் இயங்கவோ அன்றி ஒதுங்கி இருக்கவோ அனுமதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் விடுதலை இயக்கங்கள் ஆரோக்கியமாக வளரவும் எமது விடுதலைப் போராட்டம் ஆரோக்கியமான பாதையில் செல்லவும் முடியும்.

இதையுணர்ந்து எதிர்காலத்திலாவது சக போராளிகளுக்கு எதிராக துப்பாக்கிகளை திருப்பாது முழுசக்தியையும் பிரயோகித்து ஐக்கியப்பட்டு துப்பாக்கிகளை எதிரிக்கெதிராக திருப்புவது எமது விடுதலைப் போராட்டத்துக்கு நன்மை பயப்பதாகும்.

**" விடுதலைப் போராளிகளுக்கெதிராக திருப்பப்பட்ட துப்பாக்கிகள் போராளிகளைத் தொடர்ந்தழிக்குமா? அன்றி எதிரிக்கெதிராகத் திருப்பப்படுமா?"**

**போராளிகள் அழிக்கப்படலாம், போராட்டம் அழிவதில்லை!**

**மனிதர்கள் தோற்கலாம், மானுடம் தோற்பதில்லை!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org